## மேட்டூர் அணை நீர்மட்டம் 82.93 அடி

First Published : 19 Jan 2010 11:10:30 AM IST
Last Updated :

சேலம், ஜன. 18: மேட்டூர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 82.93 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 612 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 4,003 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணை நீர் இருப்பு 44.93 டி.எம்.சி.

## தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்ட விழிப்புணர்வு பிரசாரம்

First Published : 20 Jan 2010 12:26:15 AM IST
Last Updated :

விழுப்புரம், ஜன. 19: ரூ.49 கோடியில் உலக வங்கி நிதி உதவியுடன் கோமுகி உப வடிநிலம் மற்றும் கெடிலம் உப வடிநிலப் பகுதிகளில் பாசன மற்றும் வேளாண் மேம்பாட்டுப் பணிகள் குறித்த விழிப்புணர்வு ஊர்தியை விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஆர். பழனிசாமி திங்கள்கிழமை தொடங்கி வைத்தார்.

÷தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் மூலம் விவசாயம் சார்ந்த பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் விழுப்புரம், கடலூர் மாவட்டத்திலுள்ள வடிநிலப் பகுதிகளில் பாசன மற்றும் வேளாண் மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

÷பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதாரத் துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், தோட்டக் கலைத் துறை, வேளாண்மை விற்பனை மையம், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் மீன்வளத் துறை ஆகியன ஒருங்கிணைந்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

÷இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கூறியது: விழுப்புரம் மாவட்டத்தில் 120 நீர்பாசன சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கண்மாய்கள், நீர்வரத்து கால்வாய்கள் மற்றும் மதகுகள் சீரமைக்கப்படுகின்றன. இதன் மூலம் விவசாயிகள் பயனடையும் வகையிலும், பண்ணை வருவாயை உயர்த்தும் வகையிலும் நவீன சாகுபடி தொழில் நுட்பத்தின் மூலம் பாசன நீர் உபயோகத்தை மேம்படுத்தி சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன முறைகளை பரவலாக்குதல், பண்ணைக்குட்டைகள் அமைத்து கூடுதல் வருமானம் பெருக மீன் வளர்ப்பை ஊக்குவித்தல், துல்லிய வேளாண்மைத் திட்டத்தை பயன்படுத்துதல், காய்கறி, வணிக மலர் உற்பத்தியை அதிகரித்தல் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து இந்த வாகன பிரசாரம் அமையும் என்றார்.

÷நிகழ்ச்சியில் நீர்வள ஆதார அமைப்பு வெள்ளாறு வடி நில கோட்ட செயற்பொறியாளர் எம்.பழனிகுமார், விழுப்புரம் கோட்ட செயற்பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி ஜெயகுமார், பாசன மேலாண்மை பயிற்சி (திருச்சி) நிலைய உதவி பொறியாளர் முருகவேல், உதவி பொறியாளர் ரவீந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 85.79 அடி**

First Published : 20 Jan 2010 08:15:12 AM IST
Last Updated :

ஈரோடு, ஜன.19: பவானிசாகர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 85.79 அடியாக இருந்தது.

அணையிலிருந்து பாசனக் கால்வாயில் விநாடிக்கு 2,300 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணை நீர் இருப்பு 18.96 டிஎம்சி.

**மாணிக்கம்பாளையத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம்**

First Published : 20 Jan 2010 08:14:08 AM IST
Last Updated :

பவானி, ஜன. 19: பவானியை அடுத்த மாணிக்கம்பாளையம் கிராமத்தில் விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் தமிழக அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திங்கள்கிழமை திறக்கப்பட்டது.

மேட்டூர் வலது மற்றும் இடது கரை பாசன விவசாயிகள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்ததன் பேரில் குட்டமுனியப்பன் கோயிலில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது.

இந்நிலையில், மேலும் ஒரு கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி வந்தனர்.

இதையடுத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ஒத்துழைப்புடன் மாணிக்கம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் இம்மையம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மேட்டூர் வாய்க்கால் பாசன விவசாயிகள் பெரிதும் பயனடைவர்.

இந்நிலையத்தில், மேட்டூர் இடது - வலது கரை பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் ஏ.மோகன் முதல் எடையிட்டுத் தொடக்கி வைத்தார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் வால்டர், தரக்கட்டுப்பாடு துணை மேலாளர் வேலுச்சாமி, மாணிக்கம்பாளையம் சிற்றூராட்சித் தலைவர் எம்.பி.பாலசுப்பிரமணியம், தொழிலதிபர் சக்திவேல் பங்கேற்றனர்.

**பருவகால அட்டவணை தயாரிப்புப் பயிற்சி**

First Published : 18 Jan 2010 08:46:46 AM IST
Last Updated :

புதுக்கோட்டை, ஜன. 17: புதுக்கோட்டையில் விவசாயிகளுக்கு பருவகால அட்டவணை தயாரிப்பது குறித்த பயிற்சி அளிக்கும் முகாம் அண்மையில் நடைபெற்றது.

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், கிராம வள மையம் சார்பில் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமுக்கு, அறிவியல் இயக்க மாவட்டத் தலைவர் எல். பிரபாகரன் தலைமை வகித்தார். மண்டல கால்நடை பல்கலைக்கழக பேராசிரியர் மற்றும் தலைவர் பி.என். ரிச்சர்டுஜெகதீசன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். ராஜ்குமார் ஆகியோர் முகாமைத் தொடக்கிவைத்தனர். சிறப்பு விருந்தினராக சென்னை விஞ்ஞானி ஜே. ஸ்ரீதர் பங்கேற்றார். புதுக்கோட்டை அரசு மகளிர் கல்லூரி தாவரவியல் துறைத் தலைவர் கோமளவள்ளி, விவசாய ஆசிரியர் பி. செந்தில்குமார், சுகாதார ஆய்வாளர் கே. ராவணன், குழந்தைகள் வளர்ச்சித்திட்ட பயிற்றுனர் ஜி. புஷ்பகலா, முன்னோடி விவசாயிகள் கூவாட்டுப்பட்டி முருகேசன், தளிஞ்சி ராமசாமி ஆகியோர் கருத்தாளர்களாகப் பங்கேற்றனர்.

முன்னதாக, கிராம வள மைய இணைத் திட்ட அலுவலர் எஸ். முருகேசன் வரவேற்றார். எஸ். குருமூர்த்தி நன்றி கூறினார்.

### விதை உற்பத்தி பயிற்சி முகாம்

First Published : 20 Jan 2010 07:42:14 AM IST
Last Updated :

அம்பாசமுத்திரம், ஜன.19: அம்பாசமுத்திரம் அருகே சிவந்திபுரத்தில் விதை உற்பத்தி செய்தல் குறித்த சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர் பி. ரேச்சல் தலைமை வகித்தார். திருநெல்வேலி வேளாண் துணை இயக்குநர் (திட்டங்கள்) எம். துரைபாண்டியன் முகாமை துவக்கிவைத்தார்.

அம்பாசமுத்திரம் கோட்ட உதவி இயக்குநர் சி. மகாலிங்கம், வேளாண் அலுவலர் செ. பரத்வாஜ், உதவி வேளாண் அலுவலர் க. ராஜகோபால் உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர்.

உதவி வேளாண் அலுவலர்கள் கி. ராமசாமி, சு. முத்துசுவாமி மற்றும் முன்னோடி விவசாயிகள் 50-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

சங்கரன்கோவில்: சங்கரன்கோவிலில் விவசாயிகளுக்கு விதை உற்பத்தி பயிற்சி முகாம் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் மு.மு. முகம்மது காசிம் தலைமை வகித்தார். ஊராட்சி ஒன்றியத் தலைவி க.அன்புமணி துவக்கிவைத்தார். வேளாண்மை அலுவலர் சங்கர் எஸ்.நாராயணன் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தார்.

ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் பெ.பாலுச்சாமி, எஸ்.கே.சபரிராஜா, செ.குமரேசன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

### ஜன. 22-ல் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்

First Published : 20 Jan 2010 09:30:48 AM IST
Last Updated :

புதுக்கோட்டை, ஜன. 19:   புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள குறைகேட்பு நாள் கூட்டம் வருகிற 22-ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் ஆ. சுகந்தி தலைமையில் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் பல துறை அரசு அலுவலர்கள் பங்கேற்று விவசாயம் தொடர்பான கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர்.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இந்த கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டு விவசாயம் தொடர்பான கோரிக்கைகளை தெரிவித்து பயன் பெறலாம் என்று வேளாண் துறை அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தோவாளை கால்வாய் சீரமைப்பு பணிகளில் மெத்தனம் 20 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர் கருகும் அபாயம்**

அ. அருள்தாசன்First Published : 20 Jan 2010 07:36:18 AM IST
Last Updated :

நாகர்கோவில், ஜன.19:கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பிரதானமான தோவாளை கால்வாய் உடைப்பை சீரமைப்பதில் அதிகாரிகள் மெத்தனமாக செயல்படுவதால் 20 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர்கள் கருகும் அபாயத்தை நோக்கியுள்ளன.

பழையாற்றில் சுருளோடு செல்லந்துருத்தி என்ற இடத்திலிருந்து தோவாளை கால்வாய் பிரிந்து செல்கிறது. சுமார் 50 கி.மீ. நீளமுள்ள இக் கால்வாய் மூலம் தடிக்காரன்கோணம், கேசவன்புதூர், அழகியபாண்டியபுரம், காட்டுப்புதூர், கடுக்கரை, தெள்ளாந்தி, சீதப்பால், செண்பகராமன்புதூர், ராஜாவூர், அழகப்பபுரம் வழியாக அஞ்சுகிராமம் வரையில் சுமார் 20 ஆயிரம் ஏக்கர் வயல் நிலங்களும், 10 ஆயிரம் ஏக்கருக்குமேல் வாழை, தென்னை உள்ளிட்ட நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன.

நீண்ட காலமாகவே இந்த கால்வாய் பராமரிப்பின்றி விடப்பட்டுள்ளது குறித்து விவசாயிகள் புகார் தெரிவித்து வந்துள்ளனர். இந்த கால்வாயையொட்டி அமைக்கப்பட்ட சாலையில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் வாகனங்களில் அவ்வப்போது சென்று கண்காணிப்பில் ஈடுபடுவது அண்மைக்காலமாக இல்லை. சாலையும் ஆங்காங்கே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுவிட்டது. கால்வாயில் பல பகுதிகள் பலமிழந்து உடைப்பு ஏற்படும் தருவாயில் உள்ளன.

மழைக் காலங்களில் பழையாற்றில் அதிக தண்ணீர் வரத்து இருக்கும்போது இந்த கால்வாயில் அதிக தண்ணீர் வரத்து இல்லாமல் செய்து கால்வாய்களில் உடைப்பு ஏற்படாமல் இருக்கும்படி அதிகாரிகள் பார்த்து கொள்கிறார்கள்.

கடந்த 1992 அக்டோபர் மாதம் பெய்த பலத்த மழையால் தோவாளை கால்வாயில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டன. இந்த உடைப்புகள் அனைத்தும் தாற்காலிகமாக சீரமைக்கப்பட்டன. மணல் மூட்டைகளை அப் பகுதிகளில் அடுக்கி வைத்துள்ளதுடன் நின்றுவிட்டனர். நிரந்தர பராமரிப்புப் பணிகளை செய்யாததால் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதும், தண்ணீர் கசிவதும் வாடிக்கையாகியிருக்கின்றன. இது தொடர்பாக விவசாயிகள் குறைதீர் கூட்டங்களில் விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலமுறை புகார் தெரிவித்தும் அதிகாரிகள் அவற்றை சமாளித்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த 16-ம் தேதி நள்ளிரவில் இந்த கால்வாயில் 24-வது கி.மீ. பகுதியில் திடல் அருகே கால்வாயில் இடதுகரை பகுதியில் 100 அடி தூரத்துக்கு உடைப்பு ஏற்பட்டது. அந்நேரத்தில் காட்டுப் பன்றிகளால் தங்கள்

நிலங்களில் பயிர்கள் சேதப்படுவதைத் தடுக்க அப் பகுதியில் காவலில் இருந்த விவசாயிகள் இதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

நாகர்கோவில் பொதுப்பணித் துறை அலுவலகத்துக்கு இது குறித்து தகவல் தெரிவித்துள்ளனர். உடைப்பு ஏற்பட்ட பகுதியில் இருந்து வெளியேறிய தண்ணீர் அருகிலிருந்த தென்னந்தோப்புகளுக்குள் புகுந்தது. இதனால், சேதம் பெரிதாக ஏற்படவில்லை. பொதுப்பணித் துறை அதிகாரிகள் அடுத்தநாள் அப் பகுதிக்கு வந்து செல்லந்துருத்தி கால்வாயில் இருந்து தண்ணீர் திறந்துவிடுவதை தடுத்தனர்.

தற்போது தோவாளை கால்வாயில் தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டுள்ளதால் கடுக்கரை முதல் கடைவரம்பு வரை சுமார் 20 ஆயிரம் ஏக்கரில் பயிரிட்டுள்ள நெல் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த பகுதியில் நெற்பயிர்கள் பொதிவரும் பருவத்தில் உள்ளன. தொடர்ந்து தண்ணீர் வழங்காவிட்டால் இந்த பயிர்கள் கருகும் அபாயம் உருவெடுத்துள்ளது. தண்ணீர் பிரச்னையை தீர்க்க விவசாயிகள் ஆங்காங்கே இருக்கும் குட்டைகளில் இருக்கும் தண்ணீரை எடுத்து பயன்படுத்தினாலும் அதெல்லாம் 2 அல்லது 3 நாள்கள் மட்டுமே தாக்குப் பிடிக்கும்.

இந்த பிரச்னையின் தீவிரத்தை உணராமல் அதிகாரிகள் செயல்படுவதாக விவசாயிகள் தரப்பில் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. உடைப்பு ஏற்பட்டு 3 நாள்கள் ஆகியும் சீரமைப்புப் பணிகளை முழுவீச்சில் மேற்கொள்ள மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை.

செவ்வாய்க்கிழமை வரையில் உடைப்பு ஏற்பட்ட பகுதியில் மணல் மூட்டைகள் அடுக்கப்படவில்லை. தண்ணீரால் அடித்துச் செல்லப்பட்ட மணலை சேகரித்து சாக்குப்பைகளில் அடைக்கும் பணிகள் மட்டுமே மந்தகதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இவ்வாறு பணிகள் நடைபெற்றால் மணல் மூட்டைகளை அடுக்கி சீரமைப்புப் பணிகளை முடிக்க ஏறக்குறைய 2 வாரமாகிவிடும். அவ்வாறு 2 வாரமாக கால்வாயில் தண்ணீர் திறந்துவிடவில்லை என்றால் 20 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர், 5 ஆயிரம் ஏக்கரில் வாழை உள்ளிட்ட பயிர்கள் கருகும் அபாயம் உள்ளதாக கோதையாறு பாசன சேர்மன் ஏ. வின்ஸ் ஆன்றோ தெரிவித்தார்.

உடைப்பை பார்வையிட்ட அதிகாரிகளும், ஆட்சியாளர்களும் 5 நாளுக்குள் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு முடிக்கப்படும் என்று விவசாயிகளிடம் உறுதி தெரிவித்து சென்றிருந்தனர். ஆனால், 3 நாள்கள் ஆகியும் மணலை சரிப்படுத்தும் பணிகளையே மேற்கொள்ளவில்லை. தோவாளை கால்வாயில் பெரிய அளவில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் போர்க்கால அடிப்படையில் சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு கால்வாயில் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்றும் கருகும் அபாயத்தில் உள்ள பயிர்களைக் காக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## குறிச்சிப்பட்டி கடைமடைப் பகுதி குளங்களுக்கு கூடுதல் நீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை

First Published : 19 Jan 2010 12:27:44 PM IST
Last Updated :

மேலூர், ஜன.18: வெள்ளலூர் வட்டார கடைமடைப்பகுதியில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவுவதால் குளங்களுக்கு கூடுதல் தண்ணீர் கால்வாய்களில் திறந்துவிட வேண்டும் எனவிவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெரியாறு பிரதானக் கால்வாய் தனியாமங்கலம் பிரிவின் கீழ் உள்ள கடைமடைப்பகுதியில் குளங்களின் கீழ் உள்ள விவசாய நிலங்களுக்குப் போதிய தண்ணீர் கிடைக்காததால் குளங்களில் நீர் இருப்பு வெகுவாகக் குறைந்து வருகிறது.

கதிர் விடும் நிலையில் உள்ளதால் விவசாயிகள் பயிரைக் காப்பாற்ற அருகிலுள்ள கிணறுகளில் இருந்து தண்ணீர் பாய்ச்சியும், குளங்களில் உள்ள நீரை மோட்டார் மூலமும் இறைத்து வருகின்றனர். குளங்களில் உள்ள நீர் சில தினங்களில் காலியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்த முறைத் தண்ணீரை கடைமடைப் பகுதி பாசனக் குளங்களுக்கு கூடுதலாகத் திருப்பிவிட வேண்டும். நெற்ப யிருக்கு இன்னும் ஒரு மாத காலத்துக்குத் தண்ணீர் தேவையாக உள்ளது என குச்சிப்பட்டி பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கோழிப் பண்ணைகளுக்கான வானிலை அறிவிப்பு**

First Published : 20 Jan 2010 08:16:24 AM IST
Last Updated :

நாமக்கல், ஜன.19: நாமக்கல் மண்டலத்தில் உள்ள பண்ணைகளில் கோழிகளுக்கு வைட்டமின் குறைபாடு உள்ளதால் முட்டைகள் உடையும் சூழல் ஏற்பட்டுள்ளதாக வானிலை அறிவிப்பில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி வானிலை ஆய்வு மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள செய்தி: ஜன.20, 21, 22 ஆகிய தேதிகளில் வானம் தெளிவாகவும், லேசான மேகமூட்டத்துடனும் காணப்படும். மூன்று நாளும் மழையில்லை. காற்றின் வேகம் மணிக்கு 4, 6 கி.மீ. வேகத்தில் கிழக்கு, வடகிழக்கிலிருந்து வீசும். அதிகபட்ச வெப்பநிலை 86.0 டிகிரி பாரன்ஹீட் எனவும், குறைந்தபட்ச வெப்பநிலை 62.6 டிகிரி பாரன்ரீட்டாகவும் காணப்படும். காற்றின் ஈரப்பதம் அதிபட்சமாக 94 சதமாகவும், குறைந்தபட்சமாக 42 சதமாகவும் காணப்படும்.

சிறப்பு வானிலை: நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புறங்களுக்கான வானிலையில் வானம் தற்போது நிலவும் அதிகப்படியான பனிப் பொலிவுடனே காணப்படும். பகல் வெப்பம் 86 டிகிரி பாரன்ஹீட்டாகவும், இரவு வெப்பம் குறைந்தும் காணப்படும். பகல் மற்றும் இரவு நேர வெப்ப அளவுகள் குறைந்து காணப்படும். இந்த சீதோஷ்ண நிலையில் கோழிகளுக்கு வைட்டமின் குறைபாடு ஏற்படும. இதனால், பண்ணைகளில் அதிகளவு முட்டைகள் உடையும். எனவே, தீவனத்தில் வைட்டமின் மருந்துகளை 25 சதம் அதிகமாக சேர்த்து வழங்க வேண்டும். இந்த தட்பவெப்பநிலையானது மேலும் 2 வாரங்களுக்கு நீடிக்கும் வாய்ப்புள்ளதால் அதற்கேற்ப பண்ணைகளில் மேலாண்மையை சரிசெய்து கொள்ள வேண்டும்.

தினமலர்

**'மூலிகை தாவரங்களை பாதுகாக்கணும்'**

கோவை : ""அனைத்து வகை நோய்களுக்கும், மேற்கு தொடர்ச்சி மலையில் காணப்படும் மூலிகை தாவரங்களில் தீர்வு உள்ளது. இவ்வகை மூலிகை தாவரங்களை பாதுகாக்க வேண்டும்,'' என்று பாரதியார் பல்கலை தாவரவியல் துறை இணை பேராசிரியர் ராமச்சந்திரன் கூறினார்.கோவை மாவட்ட மூலிகை மற்றும் மரம் வளர்ப்போர் சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம், வேளாண் பல்கலை தாழில் நுட்ப பூங்கா கட்டடத்தில் நடந்தது. வேளாண் பல்கலையின் விரிவாக்க கல்வி இயக்ககத்துடன் இணைந்து நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில், பாரதியார் பல்கலை தாவரவியல் துறை உதவி பேராசிரியர் ராமச்சந்திரன் பேசியதாவது: கோவை மாவட்டத்தில் முன்பு இருந்த பல

அரிய வகை தாவரங்கள், மரங்கள் இன்று இல்லை. பருத்திக்கு பெயர் போன இந்நகரில், இன்று பருத்திப்பயிர் கூட இல்லை. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் ஏராளமான அரியவகை தாவரங்கள் காணப்படுகின்றன.
கேரளாவில் மீன் குழம்புக்கு பயன்படுத்தப்படும் குடம்புளி, கொழுப்பை கரைக்கும் திறன் கொண்டது, என ஆய்வில் தெரியவந்துள்ளது. தற்போது, குடம்புளியில் இருந்து உடலின் ஊளைச் சதையை குறைக்கும் மாத்திரைகளை அமெரிக்கர்கள் தயாரித்து இந்தியர்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர். இந்தியாவில் 45 ஆயிரம் தாவர வகைகளும், 17 ஆயிரம் சிறு தாவரங்களும் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.
ஊளைச்சதை குறைப்பது, ஆண்மையை அதிகரிப்பது, சர்க்கரை, எய்ட்ஸ் நோய்களை கட்டுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளுக்கான மூலிகை தாவரங்கள் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ளன.
இதில் சில தாவரங்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளன. இன்னும் ஏராளமான தாவரங்களின் மருத்துவ குணங்களை ஆராய்ச்சி செய்து வருகிறோம். அனைத்து வகை நோய்களுக்கும் தீர்வு காண உதவும் மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் மூலிகை தாவரங்களை பாதுகாக்க வேண்டும்.
இவ்வாறு, ராமச்சந்திரன் பேசினார். மூலிகை, மரம் வளர்ப்போர் சங்கத் தலைவர் தேவராஜன் பேசுகையில், ""தற்போது மரங்கள் வெட்டப்படுகின்றன. உலகம் வெப்பமயமாதல் பிரச்னைக்கு தீர்வு காண 54 கோடி மரங்கள் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஒரு கோடி மரக்கன்றுகள் நட்டாலும் 54 ஆண்டுகளில் வெப்பமயமாதலால் ஏற்படும் பாதிப்பை ஓரளவு தடுக்கலாம்," என்றார். வேளாண் பல்கலை தோட்டக்கலைத் துறை பேராசிரியர் வடிவேல், சங்கத்தின் செயலாளர் வின்சென்ட் உட்பட பலர் பங்கேற்றனர்.

### நெகமத்தில் கொப்பரை ஒரு கிலோ 31.25 ரூபாய்

பொள்ளாச்சி : நெகமம் கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக 31.25 ரூபாய் விலை கிடைத்தது. நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 20 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 113 மூட்டை கொப்பரை எடுத்து வந்தனர். மொத்தம் ஏழு வியாபாரிகள் கொப்பரை ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பா ளர் சண்முகம் ஏலத்தை நடத்தினார். முதல் தர கொப்பரை 54 மூட்டையில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 27.75 ரூபாய் முதல், அதிகபட்சம் 31.25 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 59 மூட்டையில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 19.50 ரூபாய் முதல், அதிகபட்சம் 27.55 ரூபாய் வரை விலை கிடைத் தது. அதிகாரிகள் கூறுகையில், "வெளிமார்க் கெட்டில் கொப்பரை விலை அதிகபட்சமாக 34 ரூபாய் வரையுள்ளது. ஆனால், ஏலத்திற்கு கொண்டு வரப்பட்ட கொப்பரையில் எட்டு முதல் 10 சதவீதம் ஈரப்பதம் இருந்ததால் விலை குறைவாக கிடைத்துள்ளது. தேங்காய் வரத்து குறைந்து, கொப்பரை உற்பத்தி பாதிக்கப் பட்டுள்ளதால் இன்னும் இரண்டு மாதத்திற்கு விலை குறையாமல் இருக்கும்' என்றனர்.

### வணிக வளாகமாக திசைமாறி போகும் கடலூர் உழவர் சந்தை சீரமைக்கப்படுமா?

கடலூர் : கடலூர் உழவர் சந்தை சுய உதவிக்குழு போர்வையில் வணிக வளாகமாக மாறிக் கொண்டிருக்கிறது.

விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் இடையே தரகரின்றி நேரடியாக உற்பத்தி செய்த காய்கறிகளை விற்பனை செய்வதற்காக உழவர் சந்தை திட்டத்தை 1999ம் ஆண்டு தி.மு.க., அரசு அறிமுகப்படுத்தியது. முதற்கட்டமாக 100 உழவர் சந்தைகளை மாவட் டத் தில் முக்கிய இடங்களில் திறக்கப்பட்டது. பின்னர் வந்த அ.தி.மு.க., அரசு உழவர் சந்தையை நடத்த ஆர்வம் காட்டவில்லை. அதனால் பல இடங்களில் உழவர் சந்தைகளுக்கு காய்கறி வரத்து அறவே நின்றுபோனது. இருப்பினும் நகரின் மையப்பகுதியில் அமைந்த உழவர் சந்தைகளை மூட விவசாயிகள் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது. அதனால் உழவர் சந்தை சில இடங்களில் தொடர்ந்து நடந்து வருகிறது.
அதேப்போன்று கடலூர் நகரில் மையப்பகுதியில் சந்தை அமைந்துள்ளதால் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

கடலூாில் உள்ள உழவர் சந்தையில் அதிகாாிகள் அலட்சியம் காரணமாக விவசாயிகள் வரத்து குறைந்து வருகிறது. பதிலாக வியாபாாிகள் வருகை அதிகாித்துள்ளது. தற்போது கடலூர் உழவர் சந்தையில் கரும்பு, மணிலா, வாழை வியாபாாிகள் அதிகளவில் விற்பனை செய்து வருகின்றனர். இது ஒரு புறமிருக்க சுயஉதவிக்குழு என்கிற போர்வையில் தனியார்கள் மலைக்காய்கறிக் கடைகளை நடத்தி வருகின்றனர். இவர்கள் விற் பனை செய்யும் காய்கறிகளின் விலையும் வெளிமார்க்கெட் விலையும் ஒரே மாதிாியாகவே உள்ளன. தற்போது உழவர் சந் தைக்குள் ஆவின், பிாியாணி ஓட்டல், பெட்டிக் கடை போன்றவைகளுக்கு அனுமதியளிக்கப்பட் டுள்ளன. இன்னும் ஏராளமான கட்சிக்காரர்கள் கடை கேட்டு விண்ணப் பித்துள்ளனர். ஏற்கனவே விவசாயிகள் போய் வியாபாாிகள் வந்துவிட்ட உழவர் சந்தை தற்போது வணிக வளாகமாக திசைமாறி கொண்டிருக்கிறது. நேர்மையான அதிகாாிகளை நியமித்து உழவர் சந்தையை கண்காணித்தால்தான் முதல்வாின் கொள்கை நிறைவேறும்.

### மரவள்ளி கிழங்கு விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

சிறுபாக்கம் : சிறுபாக்கம், வேப்பூர் பகுதிகளில் மரவள்ளி கிழங்கு பலமடங்கு விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.

சிறுபாக்கம், வேப்பூர், மங்களூர் பகுதிகளில் நீர்ப் பாசன விவசாயிகள் தங் களது விலை நிலங்களில் மரவள்ளி கிழங்கு பயிரான பர்மா, குங்கும ரோஸ் உள்ளிட்ட கிழங்கு வகைகளை பயிர் செய்வது வழக் கம். கடந்த சில ஆண்டுகளாக போதிய விலை இன்றி மரவள்ளி கிழங்கு பயிர் செய்வதை பெரும் பாலான விவசாயிகள் கைவிட்டனர். சில விவசாயிகள் மட் டும் மரவள்ளி கிழங்கு பயிாிட்டனர். சில மாதங்கள் முன்புவரை 100 கிலோ கிழங்கிற்கு 120 முதல் 140 ரூபாய் மட்டுமே கிடைத்தது. ஆனால் ஒரு மாதமாக மரவள்ளி கிழங்கு மூட்டை எப்போதும் இல்லாத அளவிற்கு விலை உயர்ந்து 650 முதல் 700 ரூபாய் வரை விற்பனையாகிறது. கிழங்கு உற் பத்தி குறைவால் ஆலைகளுக்கு போதிய அளவிற்கு கிழங்கு கிடைக்கவில்லை.

இதனால் சேலம், தலைவாசல், காட்டுக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த கிழங்கு ஆலை வியாபாாிகள், கிழங்கு புரோக்கர்கள் சிறுபாக்கம், மங்களூர் பகுதிகளில் முகாமிட்டு விவசாயிகளுக்கு கூடுதல் விலை கொடுத்து கிழங்கினை கொள்முதல் செய்து வருகின்றனர். கூடுதலான விலைக்கு மரவள்ளி விற்பனையாவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.

### பயறு வகைகளில் அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய நேர்த்தி முறைகள்

விருத்தாசலம் : பயறு வகைகளில் அறுவடைக்குபின் நேர்த்தி முறைகளை கையாண்டு விவசாயிகள் அதிக லாபம் பெறலாம் என வேளாண் துணை இயக்குனர் தொிவித்துள்ளார்.

இதுகுறித்து வேளாண் துணை இயக்குனர் தனவேல், கோட்ட வேளாண் அலுவலர் அமுதா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: உளுந்து, பச்சைபயறு, துவரை மற்றும் தட்டைபயறு ஆகிய வகைகளில் கூடுதல் வருமானம் பருப்பு சதவீதத்தை பொறுத்தே அமைகிறது. பயறு வகைகளில் 85 சதவீத பருப்பு அளவும், கூடுதல் விலையும் பெற அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய நேர்த்தி முறைகள். பயறு வகை காய்கள் நெற்றுகளாக மாறியும், இலைகள் பழுத்து உதிர ஆரம் பிக்கும் போது அறுவடை செய்ய வேண் டும். நெற்றுக்கள் காப்பிக்கொட்டை நிறமாகி இருந்தால் நெற்றுக்களைப் பிாித்து எடுக்க வேண்டும். செடியில் இருந்து பிாித்து எடுக்கப்பட்ட நெற்றுக்களை காயவைத்து விதைகளை பிாித்து எடுத்து சுத்தம் செய்ய வேண்டும். பிாித்து எடுத்த விதைகளில் கலந்துள்ள கல், மண், தூசி மற்றும் சருகுகள், முதிராத விதைகள், பூச்சி நோய் தாக்கிய விதைகள், உடைந்த விதைகள் இவைகளை தனியாக நீக்க வேண்டும்.

விதைகளின் ஈரப்பதம் 9 சதவிகிதத்திற்கு இருக்குமாறு நன்கு காய வைக்க வேண்டும். ஊக்குவிக்கப்பட்ட களிமண்ணை பயறுவகைப் பொருட்களுடன் 1: 100 என்ற விகிதத்தில் கலந்து வைப்பதால் பூச்சிகள் வராமல் காப்பாற்றலாம். இதை தவிர வேப்பங்கொட்டை தூளை 1 கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் உபயோகித்து பயன் பெறலாம். துவரை விதைக்கு செம்மண் தடவி காயவைத்தும் சேமிக்கலாம். பயறு வகை விதைகள் ஸ்பெஷல், நல்லது, சுமார், சாதாரணம் என நான்கு தரங்களாக பிரிக்கப்படுகிறது. எனவே விவசாயிகள் ஒழுங்குமுறை கூடத்திற்கு பயறுகளை கொண்டு வந்து லாபம் அடையுமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

### ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்குள் லாரிகளால் நெரிசல்:விற்பனை பாதிப்பதாக விவசாயிகள் புகார்

ஒட்டன்சத்திரம்:லாரிகளை தாறுமாறாக நிறுத்தி காய்களை ஏற்றிச் செல்வதால் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க் கெட்டிற்குள் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மார்க்கெட்டிற்குள் சென்று காய்கறிகளை இறக்க நீண்ட நேரம் ஆவதாக விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.ஒட்டன்சத்திரம்காய்கறி மார்க்கெட்டிற்கு தினமும் பல்வேறு இடங்களில் இருந்து காய்கறி கொண்டு வரப்படுகிறது.

காய்களை வாங்க பல்வேறு மாவட்டங்களிலிருந்தும்,அருகிலுள்ள கேரளாவிலிருந்தும் வியாபாரிகள் வருகின்றனர். ஞாயிறு,வெள்ளிக்கிழமைகளில் மார்க்கெட்டிற்கு வரும் காய்களின் எண்ணிக்கை மற்ற நாட்களை விட அதிகமாக காணப்படும்.குறிப்பிட்ட அந்த இரண்டு நாட்களில் வியாபாரிகள் காய்கறிகளை அதிகம் வாங்குவதால் அதனை ஏற்றிச் செல்வதற்கு காத்திருக்கும் சரக்கு வாகனங்களின் எண்ணிக்கையும் அதிகமாக காணப்படும்.

கடைகளில் விற்கப்பட்ட காய்களை ஏற்றிச்செல்ல வரும் வாகனங்கள் மார்க்கெட்டிற்குள் தாறுமாறாக நிறுத்தப்படுகின்றன.இதனால் மார்க்கெட்டிற்குள் போக்குவரத்து நெரிசல் கடுமையாக காணப்படும்.பகலில் இருந்தே லாரிகள் கடைகளின் முன்பு இடங்களை ஆக்கிரமித்து நிறுத்துவதால் வெளியிடங்களில் இருந்து காய்களை கொண்டு வரும் வாகனங்கள் உள்ளே நுழைய முடிவதில்லை.

ஏலம் முடிந்து நான்கு மணிநேரம் கழித்து தான் மார்க்கெட்டிற்குள் காய்களை இறக்க முடிகிறது. இதனால் நல்ல விலை கிடைக்க வாய்ப்பில்லாமல் போவதாக விவசாயிகள் புகார் கூறுகின்றனர். மேலும் ரோட்டு பகுதிகளிலேயே நீண்டநேரம் லாரிகள் நிறுத்தப் படுவதால் பஸ்ஸ்டாண்ட் முன்பு போக்குவரத்து நெரிசலும் அடிக்கடி ஏற்படுகிறது.

இப்பகுதியில் நிலவும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த வாரத்தின் இரண்டு நாட்களாவது போக்குவரத்து போலீசாரை நிறுத்த நெரிசல் ஏற்படாமல் இருக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை

குஜிலியம்பாறை:திண்டுக்கல் மாவட்டத் தில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள் ளனர்.வறட்சி பகுதியான திண் டுக்கல் மாவட்டத்தில், விவசாயத்திற்கு அடுத்து கால்நடை வளர்ப்பே முக் கிய தொழிலாக உள்ளது.

பெரும்பாலான நிலங்கள், வானம் பார்த்த பூமியாக உள்ள நிலையில், கால்நடைகளை நம்பியே ஏராளமான குடும்பங்கள் பிழைப்பு நடத்தி வருகின்றனர்.சமீப காலமாக நூறு நாள் வேலை திட்டத்தால், விவசாய கூலியாட்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. கூலி உயர்வால் விவசாயிகள், விவசாயத்தில் ஈடுபடுவதை குறைத்து, கால்நடைகள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.மாவட்ட அளவில், சமீப காலமாக, பால் உற்பத்தி அதிகரித்து வருகிறது.

பால் உற்பத்தி அதிகரித்தாலும், கால்நடைகளுக்கு போதிய மருத்துவ வசதி கிடைக்காமல், கால்நடை வளர்ப்போர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஒன்றிய அளவில் 5-10 கால்நடை கிளை நிலையங்கள் இருந்தாலும், பெரும்பாலான நிலையங்களில் ஆய்வாளர்கள் இல்லாத நிலை நீடிக்கிறது.

கால்நடைகளுக்கான மருத் துவ வசதிகள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள் ளது. குறிப்பாக பசு மற்றும் எருமை மாடுகள் சினை பிடிக்க கத்த துவங்கிய 24 மணி நேரத்திற்குள், சினை ஊசி போட வேண்டும். கிளை நிலையங்களுக்கு ஆய்வாளர்கள் எப்போது வருகிறாரோ அப்போது, சினை ஊசி போடும் நிலை இருக்கிறது.

இதனால் கால் நடைகள் சினை பிடிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஈரோடு, திருச்சி, கரூர், மதுரை, கோவை உள் ளிட்ட மாவட்டங்களில், கால்நடை வளர்ப் போரின் நலன் கருதி, நடமாடும் கால்நடை மருந்தகங்கள் செயல்படுகின்றன. இதேபோல், திண்டுக்கல் மாவட்டத்திலும், நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வர வேண்டும்.

### 20 நிலையங்கள் மூலம் 4,629 டன் நெல் கொள்முதல்

ஈரோடு: ""ஈரோடு மாவட்டத்தில் 20 கொள்முதல் நிலையங்கள் மூலம் 4,629 டன் சன்னரக நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது," என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் ஈரோடு மண்டல மேலாளர் வால்டர் கூறினார்.

ஈரோடு மாவட்டத்தில், கீழ்பவானி, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் கால்வாய் பகுதிகளில், அதிகளவு நெல், கரும்பு, வாழை, மஞ்சள் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டம் முழுவதும் பரவலாக நெல் சாகுபடி நடக்கிறது. ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில், நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படுகிறது. நடப்பாண்டில், சாகுபடி பணிகளை விவசாயிகள் தாமதமாக வங்கியதால், நவம்பர் மாதம் இரண்டாவது வாரத்துக்கு மேல்தான் நெல் அறுவடை துவங்கியது. ஈரோடு மாவட்டத்தில் சென்ற அக்டோபர் மாதம் முதல் தேதி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் சார்பில், முதல் கட்டமாக கூகலூர், கள்ளிப்பட்டி, டி.என். பாளையம், நஞ்சகவுண்டனூர், கவுந்தபாடி, சத்தி தாலுகாவில் நாகரணை, பவானி தாலுகா அத்தாணி ஆகிய ஏழு இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் துவங்கப்பட்டது.

இங்கு 17 சதவீதம் ஈரப்பதம் உள்ள சன்னரக நெல் ஒரு கிலோ 11 ரூபாய்க்கும், மோட்டோ ரக நெல் 10.50 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. ஏழு மையங்களில் டிசம்பர் 30ம் தேதி வரை கூகலூரில் 503 டன்னும், கள்ளிபட்டியில் 289, டி.என்.பாளையத்தில் 470, நஞ்சகவுண்டனூரில் 600, கவுந்தபாடியில் 582, நாகரணையில் 630, அத்தாணியில் 404 டன் சேர்த்து மொத்தம் 3,478 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஜனவரி 12ம் தேதி முதல் சத்தியமங்கலம் தாலுகா உக்கரம், பவானி தாலுகா அம்மாபேட்டை, கவுந்தபாடி, மேட்டுபாளையம், மேவாணி, ஈரோடு தாலுகா அவல்பூந்துறை, எழுமாத்தூர், கொடுமுடி, சிவகிரி, பெருந்துறை தாலுகா காஞ்சிகோவில், வெள்ளோடு, கே.ஜி.வலசு ஆகிய 13 நெல் கொள்முதல் மையங்கள் கூடுதலாக துவக்கப்பட்டன. மையம் துவங்கிய பின் பொங்கல் விடுமுறையானதால், புதிதாக துவங்கப்பட்ட மையங்களில் குறைந்தளவே நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, உக்கரத்தில் 54 டன், பவானி 25, அம்மாபேட்டை9, கவுந்தபாடி72, மேட்டுபாளையம் 90, (மேவாணி) அவல்பூந்துறை 30, எழுமாத்தூர் 66, கொடுமுடி 72, சிவகிரி26, காஞ்சிகோவில் 39, வெள்ளோடு 56, கே.ஜி.,வலசு 32 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. மொத்தம் 20 மையங்களிலும் சேர்த்து 4,629 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. சன்ன ரக நெல்தான் அதிகளவு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.இத்தகவலை ஈரோடு மண்டல தமிழ்நாடு வாணிபகழகத்தின் மேலாளர் வால்டர் கூறினார்.

**மஞ்சள் வளாகம் அமைய வணிகர் பங்கு ரூ. 2 கோடி: சட்டமன்ற குழு நடத்திய பேச்சில் முடிவு**

ஈரோடு: "மஞ்சள் வணிக வளாகம் அமைக்க நான்கு கோடி ரூபாய் தேவைப்படுகிறது. மஞ்சள் வியாபாரிகள் இரண்டு கோடி ரூபாய் கொடுத்தால், மீதமுள்ள இரண்டு கோடி ரூபாய் அரசின் மூலம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்' என தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மனுக்கள் குழு தலைவர் கோவை தங்கம் கூறினார்.

ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மனுக்கள் குழுவினர் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம் குழு தலைவர் கோவை தங்கம் தலைமையில் நடந்தது. நிருபர்களிடம் அவர் கூறியதாவது: ஈரோடு நகரில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கை. இதற்கு நான்கு கோடி ரூபாய் செலவாகும். நேற்று மஞ்சள் வியாபாரிகள் எங்கள் குழுவினரை சந்தித்தினர். காங்கேயம் எம்.எல்.ஏ., விடியல்சேகர் உட்பட பலர் இருந்தனர். பிரச்னையை சுமூகமாக முடித்து தருவதாக நாங்கள் மஞ்சள் வணிகர்களிடம் தெரிவித்தோம். அதாவது, ஒரு கோடி ரூபாய் மஞ்சள் வியாபாரிகள் சங்கம் சார்பில் வழங்க வேண்டும்; எம்.எல்.ஏ., மற்றும் எம்.பி.,க்களிடம் இருந்து ஒரு கோடி ரூபாயை மஞ்சள் வியாபாரிகள் பெற்றுத் தர வேண்டும்; மீதி இரண்டு கோடி ரூபாயை அரசிடம் பெற்றுத்தர சட்டமன்ற பேரவை மனுக்கள் குழு பரிந்துரை செய்யும். எனவே, விரைவில் மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்கான நடவடிக்கையில் இறங்க முடிவு செய்துள்ளோம்.

ஈரோடு மாவட்டத்தில் சுற்றுப்புறச்சூழல் மிகவும் மோசமாக உள்ளது. மாசுகட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. கடலில் கழிவுநீர் கலக்கும் திட்டம் மிகப்பெரிய திட்டம். இதை அரசு பரிசீலித்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் சுற்றுப்புறச்சூழலை பாதுகாக்க கலெக்டர் சுடலைகண்ணன் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடத்த வேண்டும். விரைவில் இது தொடர்பாக எம்.எல்.ஏ.,க்கள், எம்.பி.,க்கள் முக்கிய அமைப்புகளை கலெக்டர் அழைத்து பேசி விரைவில் நல்ல முடிவு எடுப்பார். அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தை நிறைவேற்றக்கோரி அரசுக்கு பரிந்துரை செய்துள்ளோம். சட்டமன்ற மனுக்கள் மீதான பல கோரிக்கைகளை ஈரோடு மாவட்ட கலெக்டர் சுடலைகண்ணன் நிறைவேற்றித் தந்துள்ளார். 21 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பில் பல நலத்திட்ட பணிகள் செய்து முடிக்க உதவியுள்ளார். சாலை அமைத்தல், பாலம் அமைத்தல், சமுதாயக் கூடம் திறப்பு உட்பட பல்வேறு அடிப்படை வசதிகளை நிறைவேற்றியுள்ளார்.

ஈரோடு அரசு மருத்துவமனையில் குழந்தைகள் வார்டு, பதிவேடு பராமரிப்பு துறை ஆகியவற்றை பார்வையிட்டோம். நாய்க்கடி, பாம்புக்கடி ஆகியவற்றுக்கு தேவையான அளவு மருந்து இருப்பு வைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.இவ்வாறு அவர் கூறினார். "ஈரோடு அரசு மருத்துவமனையில் ஏராளமான பிரச்னைகள் உள்ளது; நீங்கள் திடீரென ஆய்வு நடத்தினால், பல உண்மைகள் வெளிவரும். பிரேத பரிசோதனை கூடம் அருகே, மருந்து கழிவுகள் கொட்டி கிடக்கின்றன. இதனால் அந்த பகுதியே துர்நாற்றம் வீசுகிறது. இது தொடர்பாக அப்பகுதி மக்கள் புகார் கொடுத்துள்ளனர். இதற்கு தீர்வு என்ன?' என்று நிருபர்கள் கேட்டனர்.

இதற்கு பதிலளித்த தலைவர் கோவை தங்கம், மருத்துவமனையில் உள்ள கழிவுகளை அகற்ற கலெக்டருக்கு குழு பரிந்துரை செய்கிறது என்றார். கலெக்டர் சுடலைகண்ணன், எம்.எல்.ஏ.,க்கள் பவானிசாகர் சுப்பிரமணியம், அந்தியூர் குருசாமி, மொடக்குறிச்சி பழனிசாமி, காங்கேயம் விடியல் சேகர், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் மாயகிருஷ்ணன், மேயர் குமார் முருகேஷ், எஸ்.பி., ஜெயச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஊஞ்சலூர் டவுன் பஞ்சாயத்தில் குடிநீர் தேக்கத் தொட்டி இயக்குபவராக பணிபுரிந்து கடந்தாண்டு பணியின் போது இறந்த மலர்விழி கணவர் ரவி என்பவருக்கு குழு காப்பீடு திட்ட உதவித்தொகையாக ரூ.1.50 லட்சம் வழங்கப்பட்டது.

### நெல் கொள்முதல் நிலையம் அமைய குளித்தலை விவசாயிகள் கோரிக்கை

குளித்தலை: குளித்தலை, தோகமலை பகுதியில் அரசு நெல் கொள்முதல் நிலையம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். குளித்தலை காவிரி டெல்டா பகுதியான கே.பேட்டை, வதியம், கோட்டமேடு, பரளி, மேட்டுமருதூர், குமாரமங்கலம், பணிக்கம்பட்டி, நங்கவரம், பொய்யாமணி, நச்சலூர் மற்றும் 150க்கும் மேற்பட்ட கிராமத்தில் தற்போது நெல் சாகுபடி அறுவடை நடக்கிறது.

அரசு கொள்முதல் நிலையம் இல்லாததால் நெல் மூட்டை புரோக்கர் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. அரசு நெல் கொள்முதல் நிலையம் இல்லாததால், அவசர தேவைக்கு விவசாயிகள் சாகுபடி கடன் திருப்பி செலுத்துவதற்கு நெல் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகின்றனர்.

மேலும், இப்பகுதி நெல் மூட்டை அனைத்தும் புரோக்கர் மூலம் விலைபேசப்பட்டு லாரிகளில் கேரளா, கர்நாடகாவுக்கு கொண்டு செல்லப்படகிறது. விவசாயிகள் பயன்பெறும் வகையில் அரசு கொள்முதல் நிலையம் இப்பகுதியில் துவங்கினால், விவசாயிகளும் பயன்பெறுவதோடும், உள்ளூர் மார்க்கெட்டில் அரிசி விலை கடுமையாக ஏறுவதும் தடுக்கப்படும் என்று விவசாயிகள் கருதுகின்றனர்.

இதேபோல் தோகமலை பகுதி நெய்தலூர், சேப்ளாப்பட்டி, கட்டாணிமேடு, நாகனூர், தளிஞ்சி, நல்லூர், கழுகூர், கூடலூர் உள்ளிட்ட பகுதியிலும் நெல் அறுவடை தற்போது துவங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே, இப்பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### காய்கறி வியாபாரிகள் இன்று ஆலோசனை

மதுரை: மதுரை மாட்டுத்தாவணியில் புதிய காய்கறி மார்க்கெட் கட்டுமான பணி நடக்கிறது. தற்போதைய சென்ட்ரல் மார்க்கெட்டில் கடை வைத்திருப்பவர்களுக்கும், புதிய இடத்தில் வாடகை 5000 ரூபாய், டபாசிட் 4 லட்சம் ரூபாயாகவும் மாநகராட்சி சார்பில்  கட்டணம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.  புதிதாக கடை நடத்த உள்ளவர்களுக்கு தரைத்தளத்திற்கு வாடகை 2000 ரூபாயாகவும், டெபாசிட் 2 லட்சம் ரூபாயாகவும், மாடியில் 4000 ரூபாய் வாடகை, 3 லட்சம் ரூபாய் டெபாசிட் கட்டணம் நிர்ணயித்துள்ளதாக, மார்க்கெட் சங்கத் தலைவர் முருகன் தெரிவித்தார்.  இதுகுறித்து விவாதிக்க, இன்று மாலை 5 மணிக்கு, சென்ட்ரல் மார்க்கெட்டில் அனைத்து காய்கறி வியாபாரிகளின் ஆலோசனைக் கூட்டம் நடக்கிறது.

### பனிப்பொழிவால் பயிர் பாதிப்பு : விவசாயிகள் கவலை

நாமக்கல்: கடும் பனிப்பொழிவால் பயிர் பாதிக்கும் என்பதால் நாமக்கல் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

நாமக்கல் மற்றும் மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் ஒரு மாத காலமாக அதிகாலைப் பொழுதில் பனிப்பொழிவு அதிகமாக உள்ளது. நேற்று அதிகாலை கடும் பனிப்பொழிவு காணப்பட்டது. முக்கிய சாலைகளான திருச்சி, பரமத்தி, மோகனூர், திருச்செங்கோடு, சேலம் சாலைகளில் எதிர்வரும் வாகனங்கள் தெரியாத அளவிற்கு பனிப்பொழிவு இருந்தது. காலை 8. 30 மணி வரை பனி நீடித்தது. அதன் பிறகே பனிப்பொழிவு விலகிச் செல்லத் துவங்கியது. பனியால் அனைத்து வாகனங்களும் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடியே சென்றன. பனிப்பொழிவால் விளைநிலங்களில் உள்ள பயிர்கள் கருகி பாதிக்கும் என்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

### புயல் காரணமாக 'ஜிப்சம்' அறுவடை : சிமெண்ட் உற்பத்திக்கு சாதகம்

ராமநாதபுரம்: கடலோர மாவட்டங்களில் தொடர்ந்த புயல் சின்னம் காரணமாக , உப்பளங்களில் "ஜிப்சம்' அறுவடை அமோகமாக நடந்து வருகிறது. கடலோர மாவட்டங்களில் மீன்பிடி போல, உப்பளத்தொழிலிலும் சிறப்பாக நடந்து வருகிறது. தமிழகத்தில் தூத்துக்குடியை அடுத்து ராமநாதபுரத்தில் அதிக அளவில் உப்பளங்கள் உள்ளன. பருவ மழை தொடங்கும் அக்., முதல் ஜன., வரை உப்பளங்களில் உப்பு உற்பத்தி கடும் பாதிப்பை சந்திப்பது வழக்கம். இம்முறை தாமதமாக தொடங்கிய பருவமழையால் நவ., இறுதியில் தான் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது. பருவமழையை தொடர்ந்து , வங்ககடலில் ஏற்பட்ட புயல் சின்னங்களின் காரணமாக , கடலோர மாவட்டங்களில் நல்ல மழை நீடித்தது. இதனால் இன்று வரை உப்பு உற்பத்தி துவங்காமல் உள்ளது. இது ஒரு புறம் இருக்க, வழக்கமாக உப்பளங்களில் நடக்கும் "ஜிப்சம்' உற்பத்தி அமோகமாக நடந்து வருகிறது. மழை காலங்களில் தான் ஜிப்சம் நல்ல முளைப்பு தன்மை பெறும் என்பதால், இம்முறை வழக்கத்தை விட அதிக அளவில் "ஜிப்சம்' உற்பத்தி செய்யப்பட உள்ளது. சிமென்ட் தயாரிக்கும் மூலப்பொருட்களில் இதை பயன்படுத்துவதால், இவற்றின் கொள்முதலுக்கு இப்பவே விற்பனையாளர்கள் ராமநாதபுரம் முகாமிட தொடங்கி உள்ளனர். தமிழகம் முழுவதும் உள்ள சிமென்ட் உற்பத்தி ஆலைகளுக்கு "ஜிப்சம்' வழங்கும் நோக்கில், அதற்கான அறுவடையையும் அமோகமாக நடந்து வருகிறது. தரத்தின் அடிப்படையில் மூன்று விதமாக பிரிக்கப்படும் இவை, ஒரு டன் 1500 முதல் 1800 ரூபாய் வரை விலை போகிறது. உப்பள உற்பத்தி பாதிப்பால், வேலையை இழந்து தவித்த தொழிலாளர்களுக்கு, "ஜிப்சம்' அறுவடை காரணமாக போதிய வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள நாகராஜன் கூறியதாவது: 12 டிகிரி உவர் தன்மை கொண்ட போர்வெல் நீரை , வெளியில் பாய்ச்சி 13 டிகிரிக்கு வரும் போதே "ஜிப்சம்' கிடைத்து விடும். 24 டிகிரி வந்தால் தான் உப்பு கிடைக்கும். குறைந்த டிகிரியில் விரைவில் கிடைப்பதாலும், போதிய விலை இருப்பதாலும் "ஜிப்சம்' மூலம் லாபம் தான். புயலால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்ட நிலையில், எதிர்பாராத விதமாக "ஜிப்சம்' நல்ல மகசூல் கிடைத்து, பிழைப்பை கொடுத்துள்ளது, என்றார்.

### கூலியாட்கள் பற்றாக்குறை: இயந்திரம் மூலம் ஆத்தூரில் நெல் அறுவடை

ஆத்தூர்: ஆத்தூர் சுற்றுவட்டார பகுதிகளில் நெல் அறுவடை பணிகளுக்கு கூலி ஆட்கள் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் இயந்திரம் மூலம் நெல் அறுவடை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து விட்டது. அதனால் ஆறு, ஏரி, குளம், விவசாய கிணறுகளில் தண்ணீர் மட்டம் குறைந்து விட்டது. முக்கிய பாசனம் அளிக்கும் ஆத்தூர் கரியகோயில் அணை, முட்டல் ஏரி, மணிவிழுந்தான், பெரியேரி வெள்ளாறு அணைக்கட்டு உள்ளிட்ட நீர் நிலைகளில் தண்ணீர் குட்டை போல தேங்கியுள்ளது, பல ஏரிகள் பாலைவனம் போல் ஆகி விட்டன. ஆத்தூர், தலைவாசல் வழியாக செல்லும் வசிஷ்ட நதி, சுவேத நதிகளும் வறண்டு காணப்படுகிறது. லேசான மழைப்பொழிவை நம்பி ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம் பகுதிகளில் பரவலாக நெல் நடவு பணி மேற்கொண்டனர். அவை அறுவடை செய்வதற்கு தயார் நிலையில் விளைநிலத்தில் விளைந்து சாய்ந்து கிடக்கின்றன. ஆனால் கூலியாட்கள் தான் யாரும் கிடைப்பதில்லை.

தேசிய ஊரக வேலை உறுதி திட்டப்பணிகளுக்கு 100 ரூபாய் கூலி உயர்த்தியுள்ளதால், விளைநில பணிகள் முற்றிலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. நெல் அறுவடை பணிகளுக்கு கூலி ஆட்கள் கிடைக்காமல் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர். வேறு வழியின்றி இயந்திரம் மூலமாக அறுவடை கொள்ள வேண்டியுள்ளது. அறுவடை இயந்திரத்துக்கு கடும் "கிராக்கி' ஏற்பட்டுள்ளதால் கூடுதல் வாடகை கொடுத்து அறுவடை செய்யும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். ஆத்தூர் கல்லாநத்தம் தங்கராஜ் கூறியதாவது: தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் 100 ரூபாய் கூலி கொடுப்பதால் கூலியாட்கள் அனைவரும் அங்கு

செல்கின்றனர். அதனால் நெல், மக்காச்சோளம் உள்ளிட்ட தானிய பயிர்களையும், காய்கறிகளையும் அறுவடை செய்ய முடியவில்லை.

நெல், மக்காச்சோளம் பயிர்களுக்கு கூடுதல் வாடகை கொடுத்து இயந்திரத்தில் அறுவடை செய்கிறோம். அதற்கு ஒரு மணி நேரத்துக்கு 1,000 ரூபாய் முதல் 1,200 ரூபாய் வரை கொடுக்க வேண்டியுள்ளது. நெல் அறுவடை காலத்தில் தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பணிகளை நிறுத்தி, குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே செய்தால் விவசாயப்பணிகள் நலிவடையாமல் இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

### தெளிப்பு நீர் கருவிக்கு மானியம்: இணை இயக்குனர் தகவல்

சிவகங்கை: நிலக்கடலை, பயறு பயிரிடும் விவசாயிகளுக்கு, 50 சதவீத மானியத்தில் தெளிப்பு நீர் கருவி வழங்கப்படுகிறது. விவசாய இணை இயக்குனர் சுப்பிரமணியன் கூறியதாவது: கிணற்று பாசனம் மூலம் நிலக்கடலை, உளுந்து, பயறு வகைகள் நடவு செய்துள்ள விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி, விளைச் சலை அதிகரிக்க வேண்டும். இதற்காக மானிய விலையில், தெளிப்பு நீர் கருவி வழங்கப்படும். இக்கருவியின் விலை 15 ஆயிரம் ரூபாய். இதில் 7,500 ரூபாய் மானியமாக வழங்கப்படும். இம்மாவட்டத்திற்கு 150 கருவிகள் ஒதுக்கப் பட்டுள்ளன. தேவைப்படும் விவசாயிகள், அந்தந்த உதவி இயக்குனர்களை அணுகலாம், என்றார்.

### விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கும்பகோணம்:மழை மற்றும் வெள்ள பாதிப்புகளில் இருந்து பயிர்களை பாதுகாக்கும் வகையில் முன்னெச்சரிக்கையாக திட்டமிட்டு பாசன மற்றும் வடிவாய்க்கால்களை தூர்வார வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தினர்.கோட்ட அளவிலான விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் கும்பகோணம் ஆர்.டி.ஓ செங்குட்டுவன் தலைமையில் நடந்தது. வனத்துறை சரக அலுவலர் ராமச்சந்திரன், பொதுப்பணித் துறை உதவி பொறியாளர் முத்துமணி, சமூகநல பாதுகாப்பு திட்ட தாசில்தார் முருகதாஸ் உட்பட பலதுறை அலுவலர்கள், விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.காவனூர் விவசாயி ஆரோக்கியதாஸ்: மழை மற்றும் வெள்ள காலங்களில் ஏனநல்லூர் உட்பட 5 வாய்க்கால்களின் உபரிநீர் காவனூருக்குதான் வருகிறது. தண்ணீர் வடிந்து நிலத்தை பார்ப்பதே அரிதாக உள்ளது. எனவே பாசன வாய்க்காலை 9 கி.மீ தூரம் தூர் வார வேண்டியிருக்கிறது. கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் பயிர்கள் அனைத்தும் நீரில் மூழ்கி பெரும் சேதம் ஏற்பட்டது. வடிகால்களையும் கண்டறிந்து தூர்வார வேண்டும்.

எஸ்.புதூர் யுவராஜ்: நண்டலாறை தூர்வார வேண்டுமென பலமுறை கேட்டு வந்தேன். சமீபத்தில் தூர்வாரி கொடுத்தனர். இதனால் இந்த ஆண்டு பெய்த கனமழையில் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் தண்ணீர் வடிந்துவிட்டது.இதேபோல காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள அனைத்து பாசன மற்றும் வடிகால் வாய்க்கால்களை பிப். மாதத்திற்குள் கண்டறிந்து ஏப். மாதத்திற்குள் தூர்வார வேண்டும்.
ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையம் புதிதாக கண்டறிந்த ஏ.டி.டி 43 ரகம் விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக உள்ளது. எக்காலத்திலும் சாகுபடிக்கு ஏற்றதாகவும், நல்ல மகசூல் மற்றும் விலை உள்ளது. கோடை சாகுபடியிலும் நெல் நடப்பட உள்ளதால் தேவையான விதை நெல்லை வேளாண் துறை சப்ளை செய்ய வேண்டும்.விவசாயி ராமலிங்கம்: குறுவை சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்காததால் சம்பாவுக்கு பிறகு விவசாயிகள் 3ம் போகம் சாகுபடி செய்ய உள்ளனர். இச்சாகுபடிக்கு டி.ஏ.பி உரம் தான் முழுமையாக தேவை. தனியார் உரம் விற்கக் கூடாது என்பதால் தேவையான உரத்தை கூட்டுறவு துறை மூலம் கிடைக்க செய்ய வேண்டும்.தஞ்சை மாவட்ட உழவர் விவாதக்குழு அமைப்பாளர் தியாகராஜன்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மத்திய அரசின் உணவு கழகத்தை போல செயல்படுகிறது. விவசாயிகளுக்கு அனுகூலமாக இல்லை.

அரசு சட்டம் போட்டாலும் விவசாயிகளையும், அரசையும் நுகர்பொருள் துறை மதிப்பதில்லை. 16 சதவீத ஈர நெல்லைத்தான் வாங்குகின்றனர். காலை 11 மணி வரை பனி பெய்கிறது. மழையில் நனைந்த நெல் இன்னும் காயவில்லை. எனவே 22 சதவீதம் ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய வேண்டும்.விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்ட தலைவர் ராமலிங்கம்: தாராசுரத்தில் ஒரு ஏக்கரில் சம்பா சாகுபடி செய்த பெண்ணின் வயலில் நெல் அறுவடைக்கு தயாராக உள்ளது. ஆனால் அப்பகுதியை சேர்ந்த ஒருவர் அந்த பெண்ணை அறுவடை செய்ய விடாமல் அரிவாளை காட்டி மிரட்டுகிறார். போலீஸ் பாதுகாப்புடன் உடனே அறுவடை செய்ய வேண்டும்.திருப்புறம்பயம் தியாகராஜன்: சம்பா அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள வயல்களில் இன்னும் மழைநீர் வடியவில்லை. நெல் கொள்முதல் நிலைய அலுவலர்களோ, வேளாண் துறையோ வயல்களுக்கு சென்று பார்ப்பதில்லை. உட்கார்ந்த இடத்திலேயே புள்ளி விவரங்களை பட்டியல் போட்டு கொடுக்கின்றனர். எந்த கிராமத்திலும் வி.ஏ.ஓ இருப்பதில்லை. அவர் எங்கு சென்றிருக்கிறார் என அறிவிப்பு பலகை வைக்க வேண்டுமென அரசு உத்தரவு போட்டும் செயல்பாடு இல்லை.விவசாயி நாராயணன்: காங்கேயன்பேட்டையில் 100 ஏக்கரில் உளுந்து பயறு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஆடு, மாடு தொந்தரவு தாங்க முடியவில்லை. அங்கிருந்த "ஆட்டுப்பட்டி' செயல்பட செய்ய வேண்டும்.ஆர்.டி.ஓ.,: ஏற்கனவே இது தொடர்பான புகார் வந்துள்ளது. சம்மந்தப்பட்ட கிராம அலுவலர் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்.தியாகராஜன்: முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளபடி தஞ்சை மாவட்டத்திற்கு 16 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். அப்போது தான் முழு அளவில் மூன்றாம் போகம் விவசாயம் நடைபெறும். தேவையான விதை நெல்லை வேளாண் துறையே உற்பத்தி செய்து தர வேண்டும். காவிரி டெல்டா மாவட்டங்களில் 36 ஆறுகள், 24 ஆயிரம் வாய்க் கால்கள், 13 ஆயிரத்து 336 வடிகால்கள் தான் நமது உடல் நரம்புகளைப் போல விவசாயிகளுக்கு உயிரோட்டம். அவற்றில் தூர்ந்து உள்ள, ஆக்ரமித்துள்ள பகுதிகளை கண்டறிந்து உடனே தூர்வார வேண்டும்.

ராஜேந்திரன்: கல்லூர், உத்திரை வாய்க்கால்களில் உள்ள ஆக்ரமிப்புகளை அகற்ற வேண்டும்.தியாகராஜன்: புளியஞ்சேரி முதல் குடிதாங்கி வரையிலான தார்சாலை 6 மாதம் முன்பு தான் போடப்பட்டது. ஆனால் அனைத்தும் அதற்குள் பெயர்ந்து வந்துவிட்டது. நாகக்குடி வாய்க்காலில் இரவோடு இரவாக குழாயை பதித்துள்ளனர். தேவையான மண்ணை போட்டு மூடாததால் ஒன்றரை அடி ஆழத்திற்கு பள்ளம் ஏற்பட்டு உள்ளது. அவ்வழியே செல்பவர் கள் தினமும் விழுந்து எழுந்துதான் செல்ல வேண்டியிருக்கிறது. நேற்று முன்தினம் பைக்கில் சென்ற வாலிபர் குழியில் விழுந்து அங்கேயே இறந்து விட்டார். மற்றொரு வாலிபரின் கால் முறிந்து விட்டது. நெடுஞ்சாலைத் துறை உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் பேசினர்.

### மீன் வளர்ப்புபயிற்சி தொடக்கம்

தஞ்சாவூர்: தஞ்சை கால்நடை மருத்துவ பல்கலைக் கழகத்தில் இன்று முதல் கெண்டை மீன் வளர்ப்பு பயிற்சி தொடங்க உள்ளதாக பேராசிரியர் புண்ணியமூர்த்தி தெரிவித்து உள்ளார்.இது பற்றி அவர் தெரிவித்திருப்பதாவது:தஞ்சை நாஞ்சிக்கோட்டை சாலை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் இன்று (20ம் தேதி) கெண்டை மீன் வளர்ப்பு பயிற்சி தொடங்குகிறது. இந்த பயிற்சி வரும் 22ம்தேதி வரை நடக்கிறது.பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மையத்திற்கு நேரில் வரவேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### பீன்ஸ் விலை வீழ்ச்சி

தேவாரம்:ஓசூர், மேட்டுப்பாளையம் பீன்ஸ் வரத்து அதிகரித்துள்ளதால் தேவாரம் மார்க்கெட்டில் பீன்ஸ் விலை வீழ்ச்சியடைந் துள்ளது. தேவாரம், ஒட்டன்சத்திரம் தினசரி மார்க்கெட் மூலம் பெரும் பகுதி பீன்ஸ் கேரளாவிற்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்த, சில வாரங்களாக ஓசூர், மேட்டுப்பாளையம் பகுதியிலிருந்து புஷ் ரக பீன்ஸ் மதுரை, கம்பத்திற்கு கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்துகேரளாவிற்கு அனுப்பப்படுகிறது.

தேவாரம் பகுதியில் விளையும் பீன்சை விட நல்ல கலராக, திரட்சியாக நீண்டும் ஒரு வாரம் கருக்காமல் தாங்குகிறது. இதனால் விலை சரிந்து ஒரு கிலோ ஆறு ரூபாய்க் கும் குறைவாக விற்கிறது.

காய்கறிகள்விலை நிலவரம்(கிலோவில்) வெண்டிக்காய் 8 ரூபாய் முதல் 10 ரூபாயாகவும், சீனிஅவரை 7 முதல் 9 ரூபாயாகவும் விற்கப் படுகிறது. சென்ற வாரம் 150 ரூபாய் வரை விற்பனையான ஒரு பெட்டி(15 கிலோ) தக்காளி விலை சரிந்து 50 ரூபாய்க்கு குறைவாக விற்கிறது. பூசணி 3, பீட்ரூட் 8 ரூபாய், பாகற்காய் 8 ரூபாயாகவும், அவரை 5 ரூபாய், கத்தரி 10 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

### மானாவாரி பயிர்களின் அறுவடைப்பணி துவங்கியது

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்டத்தில் மானாவாரி பயிர்களின் அறுவடைப்பணி துவங்கி விட்டது. இந்நிலையில், மானாவாரி பயிர்களின் மகசூல் மிகவும் குறைவாக இருப்பதால் விவசாயிகள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். இதற்கிடையே உளுந்து, பாசிப்பயிறு போன்ற மானாவாரி பயிர்களின் விலை சந்தையில் கடுமையாக உயரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில், தாமிரபரணி நதிக்கரை ஓரங்களை தவிர மற்றபகுதிகள் மானாவாரி பகுதிகளாகவே உள்ளன. மாவட்டத்தில் சுமார் 50 சதவீதம் பகுதிகளுக்கு மேல் மானாவாரி விவசாயமே சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அதிலும் சாத்தான்குளம், ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம், கோவில்பட்டி, எட்டயபுரம், தூத்துக்குடி தாலுகா பகுதிகளில் தான் மானாவாரி விவசாயம் செய்யப்படுகிறது. இந்த மானாவாரி நிலங்களில் பெரும்பாலும் உளுந்து, பாசிப்பயிறு, மக்காச்சோளம், கம்பு, சோளம், எள் போன்ற உணவுத்தானியப் பயிர்களும், பருத்தி, வத்தல், வணிகப்பயிர்களையும் விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர். சில இடங்களில் வெங்காயம், மொச்சை போன்ற பயிர்களும் பயிர் செய்து வருகின்றனர். இந்நிலையில், கடந்த ஆண்டு, மாவட்டத்தில் மழை நன்கு பெய்யக்கூடும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் தங்கள் மானாவாரி நிலங்களை உழுது பயிர் செய்வதற்கு தகுந்த வகையில் பதப்படுத்தி, வருடந்தோறும் மழை பெய்யும் மாதங்களை அறிந்து விதைப்பு பணிகளையும் முடித்து இருந்தனர். ஆனால் தமிழகத்திற்கு அதிக மழை வழங்கக்கூடிய வடகிழக்கு பருவமழை தாமதமாக பெய்தது. அதன் காரணமாக, விதைகள் அனைத்தும் பாதி முளைத்தும், பாதி முளைக்காமலும் விவசாயிகளை சோதனைக்கு உள்ளாக்கியது. இதற்கிடையே, உழவு பணி, விதைப்பு பணி என, விவசாயிகள் கணிசமான தொகையை செலவழித்துவிட்டனர். ஆனாலும், பயிர்கள் நன்கு ஒரு சேர முளைக்காததால் மீண்டும் அறுவடைப் பணியை விவசாயிகள் துவக்கினர். அதனால் விவசாயிகள் பயிர் செய்த வகைக்கு செலவு செய்த பணம் 2 மடங்காக எகிறிவிட்டது.

ஆனாலும் பயிர்கள் வளர்ந்து நன்கு விளைச்சலை கொடுக்கும் என எதிர்பார்ப்பில் விவசாயிகள் இருந்தனர். ஆனால் காலம் தாழ்ந்ததால் பயிர்கள் வளரவில்லை. அதுபோல் பயிர்களில் பூ பிடித்தபோது, அடைமழை பெய்ததால் பூக்கள் அனைத்தும் உதிர்ந்துவிட்டன. ஏற்கனவே, விவசாயிகள் ஒரு முறைக்கு 2 முறை விதைப்பு பணியினை மேற்கொண்டு, அதற்காக 2 முறை பணம் செலவு செய்து உள்ளனர். அதுபோல் பயிர்கள் வளர்ந்த போது மழை பெய்து பூக்களும் உதிர்ந்துவிட்டன. அதுபோல் பயிர்களுடன், களைகளும் அடர்ந்து வளர்ந்து பயிர்களை மூடி மறைத்து பயிர்களை வளரவிடவில்லை. இப்படி விவசாயம் செய்வதில் பல முட்டுக்கட்டைகள் இந்தாண்டு நிகழ்ந்ததால், விவசாயிகள் சோகத்தில் ஆழ்ந்து இருந்தனர். இதற்கிடையே பல விவசாயிகளின் நிலங்களில் அறுவடை செய்ய வேண்டிய நேரத்தில் செடிகளாகவே தற்போது காட்சி அளித்து வருகின்றன.இது அத்தனையும் தாண்டி தற்போது விளைந்துள்ள மானாவாரி பயிர்களில், ஒரு சில விவசாயிகள் அறுவடை பணியினை மேற்கொண்டு வருகின்றனர். இதில், விவசாயிகள் முன்பு எடுத்த மகசூலில் கால் பகுதி கூட விளையவில்லை என்பது தான் விவசாயிகளை மேலும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இதனால் பல விவசாயிகள் அறுவடைப்பணியினை இன்னும் துவங்காமல் விவசாயத்திற்காக அதிகம் செலவழித்து விட்டு, போட்ட பணத்தை எடுக்க முடியாத கவலையில் உள்ளனர். தற்போது, மானாவாரி மகசூல் மிகவும் குறைவாக உள்ளதால் வரும் காலங்களில் சந்தைகளில் உணவு தானியப் பயிர்கள் விலை கடுமையாக உயரக்கூடும் என விவசாயிகள்

தெரிவித்தனர். மேலும் தற்போது விளைந்துள்ள மகசூல், விற்பனைக்கு கொண்டு செல்லும் அளவு கிடைக்கவில்லை என்றும், அதனால் தங்களது பயன்பாட்டிற்காக வைத்துக் கொள்ள இருப்பதாகவும் தெரிவித்தனர்.

### பழக்கன்றுகள் வழங்கும் விழா

சாத்தான்குளம் : சாத்தான்குளம் அருகேயுள்ள கொம்பன்குளத்தில் பள்ளி மாணவர்களுக்கு பழக்கன்றுகள் வழங்கும் விழா நடந்தது.நபார்டு பாங்க் உதவியுடன் வீட்ஸ் நிறுவனம் முதலூர் மற்றும் கொம்பன்குளம் நீர்வடி சங்கம் ஆகியோர் இணைந்து கொம்பன்குளம் அரசு துவக்கப்பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பழக்கன்றுகள் வழங்கும் விழா நடந்தது. விழாவிற்கு கொம்பன்குளம் கிராம நீர்வடி சங்க தலைவர் சீனிவாசன் தலைமை வகித்தார்.தலைமையாசிரியை சண்முகசுந்தரி முன்னிலை வகித்தார். வீட்ஸ் இயக்குநர் சார்லஸ் வரவேற்றார். நபார்டு பாங்க் மேலாளர் மாணவர்களுக்கு பழக்கன்றுகளை வழங்கி பேசினார். வீட்ஸ் பணியாளர் முருகன் நன்றி கூறினார். மாவட்ட நீர்வடிப் பகுதி முகாம் அதிகாரி அகஸ்டின் பீட்டர், பஞ்.,யூனியன் பள்ளி தலைமை ஆசிரியர் அந்தோணி ஜெபசிங், வீட்ஸ் பணியாளர்கள் ஷாஜி, விமலா, பிரவின் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### இலைப்புள்ளி நோய் கட்டுப்படுத்த ஆலோசனை

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் வாழையில் ஏற்பட்டுள்ள மட்டைக்காய்ச்சல் மற்றும் இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்துவதற்கான முறைகளை தேசிய வாழை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.
இதுகுறித்து அம்மையத்தின் இயக்குனர் முஸ்தபா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:தமிழகம் முழுவதும் தற்போது பனிப்பொழிவு அதிகமாக இருப்பதால் வாழையில் மட்டைக்காய்ச்சல் அல்லது இலைப்புள்ளி நோய் அதிகமாகத் தென்படுகிறது. இதனால் வாழை இலைகள் காய்ந்தும், காய்கள் வளர்ச்சி அடைவதற்கு தேவையான பச்சை இலைகளின் எண்ணிக்கை குறைய வாய்ப்புகள் உள்ளதால் வாழையின் மகசூல் 20ல் இருந்து 50 சதவீதம் வரை இழப்பு ஏற்படலாம். மேலும் இந்நோயினால் வாழைத்தார்கள் சரியாக முதிர்ச்சி அடையாமல், பிஞ்சிலேயே பழுத்தும், காய்கள் சிறுத்து மகசூலை அதிக அளவில் பாதிக்க வாய்ப்புகள் உள்ளன.

இந்நோய் கற்பூரவள்ளி ரகத்தைத் தவிர மற்ற அனைத்து ரகங்களையும் மிக அதிகமாகத் தாக்குகிறது. இந்நோயானது மழைக்காலங்களில் வடிகால் வசதியில்லாமல் இருப்பதனாலும், காற்றின் ஈரப்பதம் அதிகமாகி வெப்பநிலை குறைவாக இருப்பதினாலும், இப்பனிக்காலங்களில் இந்நோய் அதிகமாக பரவி வருகிறது. திருச்சி மாவட்டத்தில் வாழை அதிக அளவில் சாகுபடி செய்துள்ள வயலூர், முள்ளிக்கரும்பூர், எட்டரை, கோப்பு போன்ற பகுதிகளில் நேந்திரன் வாழை ரகங்களில் இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறது. இந்நோயின் தாக்கத்தினால் அடியிலுள்ள 3 அல்லது 4 இலைகள் அதிகம் பாதிக்கப்பட்டு மஞ்சள் நிறமாகக் காணப்படுகிறது. இந்நோயைக் கட்டுப்படுத்த முதலில் மட்டைக்காய்ச்சல் பாதித்த இலைகள் அனைத்தையும் நீக்கி, தீ வைத்து அழித்துவிட வேண்டும். பின்பு 20ல் இருந்து 25 நாட்களுக்கு ஒரு முறை கீழ்கண்டமருந்துகளை கொடுக்கப்பட்ட வரிசையில் ஒரு டாங்கிற்கு 8 மில்லி ஒட்டும் திரவம் கலந்து இலையின் மேல் மற்றும் கீழ்பாகம் முழுவதும் நனையுமாறு எல்லா இலைகளின் மீதும் தெளிக்க வேண்டும்.

1) புரோப்பிகோனசோல் - ஒரு மிலி ஒரு லிட்டர் தண்ணீர் 2) டிரைடிமார்ப் - 1 மிலி ஒரு லிட்டர் தண்ணீர் 3) கார்பென்டசிம் - ஒரு கிராம் ஒரு லிட்டர் தண்ணீர் 4) மேன்கோசெப் - 2.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீர். எனவே வாழை விவசாயிகள் மேற்கூறிய நோய்கட்டுப்பாடு முறைகளை நன்கு கடைப்பிடித்து மட்டைக்காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### 22ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருச்சி: விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டமன்றத்தில் வரும் 22ம் தேதி காலை 10.30 மணிக்கு நடக்க உள்ளது.கூட்டத்திற்கு கலெக்டர் சவுண்டையா தலைமை வகிக்க உள்ளார்.இதில் விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொள்ளலாம். நீர்பாசனம், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடனுதவிகள், விவசாய மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் ஆகியவை பற்றி விவசாயிகள் நேரில் கூறலாம்.மேலும் தங்களுக்குள்ள குறைகள் குறித்து மனுக்கொடுக்கலாம். இவ்வாறு கலெக்டர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நெல்லை மாவட்டத்தில் 5 இடங்களில் தானியங்கி வானிலை நிலையம் : வேளாண் அதிகாரி தகவல்

தென்காசி: நெல்லை மாவட்டத்தில் தென்காசி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம், மானூர், ராதாபுரம் பகுதியில் தானியங்கி வானிலை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என தென்காசி வேளாண்மை விரிவாக்க மைய வேளாண்மை உதவி இயக்குநர் ஐரிஷ்சேகர் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:பருவமழையை நம்பியுள்ள வேளாண்மை வெற்றி பெறுவது, வேளாண் பருவத்தில் நிலவும் காலநிலைக்கேற்றவாறு விவசாயிகள் எடுக்கும் முடிவுகளை பொருத்து உள்ளது. தற்போது விவசாயிகளுக்கு அளிக்கப்படும் வானிலை முன்னறிவிப்பின் திறனை அதிகப்படுத்த குறுகிய தூர மற்றும் குறுகிய கால இடைவெளியில் காலநிலையில் ஏற்படும் மாற்றங்களை அவ்வப்போது விவசாயிகளுக்கு அறிவிப்பது வழக்கம்.

இதற்கென தமிழ்நாடு அரசின் வேளாண்மை துறையும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகமும் இணைந்து தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தானியங்கி வானிலை நிலையங்களை மாநிலம் முழுவதும் 224 வட்டாரங்களில் அமைத்துள்ளன. நெல்லை மாவட்டத்தில் தென்காசி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம், மானூர், ராதாபுரம் வட்டாரங்களில் இத்தகைய தானியங்கி வானிலை நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்த சவதி மூலம் காற்றின் வெப்பநிலை, மண்ணின் ஈரப்பதம், இலையின் ஈர அளவு, காற்றின் ஈரப்பதம், மழையளவு உள்ளிட்ட 10 வகையான வானிலை காரணிகளை பதிவு செய்யப்பட்டு நவீன தொலைத்தொடர்பு வசதிகள் உதவியுடன் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திலுள்ள மாஸ்டர் கம்ப்யூட்டரில் சேகரிக்கப்படுகிறது.இதன் பின்னர் விவசாயிகள் அவற்றை அறிந்து கொள்ளும் வகையில் இணையதளத்தில் தகவல்கள் வெளியிடப்படுகின்றன. ஒரு மணி நேர இடைவெளியில் வானிலையில் ஏற்படும் மாற்றங்களை அவ்வப்போது இந்த இணையதளம் மூலம் விவசாயிகள் அறிந்து கொள்ளலாம். இந்த வானிலை தகவல்களின் அடிப்படையில் தென்காசி வட்டார விவசாயிகளுக்கு வானிலை சார்ந்த வேளாண் தொழில் நுட்பங்கள் தற்போது வெளியிடப்படுகிறது.

### வள்ளியூரில் விதை சான்று உதவி இயக்குநர் ஆய்வு

தென்காசி:வள்ளியூர் பகுதியில் விதை சான்று உதவி இயக்குநர் ஆய்வு செய்தார்.வள்ளியூர் வட்டாரம் பழவூர், ஆவரைகுளத்தில் அமைக்கப்பட்டுள்ள நிலக்கடலை டி.எம்.வி.7, உளுந்து வம்பன் 3 விதைப்பண்ணைகளை மாவட்ட விதைச் சான்று உதவி இயக்குநர் பிரம்மநாயகம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர் விதைப்பண்ணை விவசாயிகள் தரமான விதைகளை வழங்க அறிவுரை கூறினார்.ஆய்வின் போது மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் தேவசகாயம், வள்ளியூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மார்சலின், விதை சான்று அலுவலர் சுரேஷ், வேளாண்மை அலுவலர் சுஜாதாபாய், உதவி விதை அலுவலர்கள் குமாரதாஸ், ஜெயச்சந்திரன் உடனிருந்தனர்.

**பழவூரில் உழவர் வயல் வெளி பள்ளி**

தென்காசி: வள்ளியூர் பழவூரில் உழவர் வயல் வெளி பள்ளி நடந்தது.வள்ளியூர் வட்டாரம் பழவூரில் ஐசோபாம் திட்டத்தின் கீழ் பயறு விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு செயல் விளக்கம் மற்றும் உழவர் வயல் வ�ளி பள்ளி துவக்க விழா நடந்தது. மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் தேவசகாயம் தலைமை வகித்து பேசும் போது, உழவர் வயல் வெளி பள்ளியின் நோக்கம், பயன்கள் குறித்து விளக்கினார். வள்ளியூர் வேளாண்மை உதவி இயக்குநர் மார்சலின் வரவேற்று பேசினார்.வேளாண்மை அலுவலர் சுஜாதாபாய் விவசாயிகளுக்கு உழவர் வயல் வெளி பள்ளி குறித்து பயிற்சி அளித்தார். ஏற்பாடுகளை பழவூர் வேளாண்மை உதவி அலுவலர்கள் சிவநீலன், சதீஷ்குமார் செய்திருந்தனர்.

**விதை கிராம திட்ட பயிற்சி**

தென்காசி: கீழப்பாவூர் வட்டாரம் ராஜகோபாலபேரியில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நெல் விதை உற்பத்தி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.ராஜகோபாலபேரியில் நடந்த இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்வேல் முருகன் தலைமை வகித்து விதை கிராம திட்டம் பற்றியும், பயிற்சியின் நோக்கம் பற்றியும் விளக்கினார். விதை சான்று அலுவலர் சிவகுருநாதன் நெல் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கம் அளித்தார். 50 விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் முருகேசன், மாரியப்பன், அப்துல்கரீம் செய்திருந்தனர்.* ஆவுடையானூரில் விதை கிராம திட்டத்தின் கீழ் நிலக்கடலை விதை உற்பத்தி பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை அலுவலர் கனகம்மாள் வரவேற்று பேசினார். வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்வேல் முருகன் விதை கிராம திட்டம் பற்றி விளக்கினார். நெல்லை வேளாண்மை அலுவலர் ராஜசேகர் நிலக்கடலை விதை உற்பத்தி நுட்பங்கள் பற்றி பேசினார். மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) லூயிஸ் ராஜரத்னம் விவசாயிகள் பயிற்சி பெற்று விதைகளை தாங்களே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும் என்றார். 50 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் அண்ணாமலை, ஜெயா, உழவர் மன்ற அமைப்பாளர் காமராஜ் செய்திருந்தனர்.

**சிறந்த தோட்டக்கலை விவசாயிக்கு ஊக்க தொகை**

தென்காசி: கடையம் வட்டாரத்தில் சிறந்த தோட்டக்கலை விவசாயிக்கு அரசு ஊக்க தொகை வழங்கப்பட்டது.கடையம் வட்டாரத்தில் தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்திய திட்டங்களில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் மா, நெல்லி பரப்பு அதிகரித்துள்ளது. சொட்டு நீர் பாசன திட்டத்தின் கீழ் எலுமிச்சை, மா, நெல்லி போன்ற பயிருக்கு நீர்பாசனம் செய்யப்பட்டது. புதிய நீர் நிலைகள் உருவாக்குதல் திட்டத்தின் கீழ் புதிய நீர் நிலைகள் அமைக்கப்பட்டது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் துல்லிய பண்ணையம் காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நிழல் வலைகள் மூலம் நாற்றாங்கால்கள் அமைக்கப்பட்டுள்ளது.இதுபோன்ற திட்டங்களை கடைபிடித்து சிறந்த தோட்டக்கலை அமைத்த விவசாயி பாப்பான்குளத்தை சேர்ந்த மேரிஜான் என்பவருக்கு அரசு ஊக்கத் தொகை வழங்கும் நிகழ்ச்சி கடையம் யூனியன் அலுவலகத்தில் நடந்தது. யூனியன் தலைவர் சங்குகிருஷ்ணன் தலைமை வகித்து மேரிஜானுக்கு அரசின் ஊக்க தொகை 4 ஆயிரத்திற்கான காசோலையை வழங்கினார்.நிகழ்ச்சியில் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் ஜெயக்குமார், உதவி வேளாண்மை இயக்குநர் ராஜசேகர், தோட்டக்கலை துணை அலுவலர் லட்சுமண பெருமாள், வேளாண் துணை அலுவலர் தவசி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### பாளை., காந்தி மார்க்கெட்டில் ஆக்ரமிப்பு நெருக்கடி இல்லாமல் மக்களுக்கு நடைபாதை

திருநெல்வேலி : பாளை., காந்தி மார்க்கெட்டில் இடையூராக உள்ள ஆக்ரமிப்பு கடைகளை அகற்றி பொதுமக்கள் நெருக்கடி இல்லாமல் செல்ல வழி ஏற்படுத்தி தரவேண்டும் என துணைமேயரிடம் 13வது வார்டு கவுன்சிலர் ரேவதிஅசோக் மனுக் கொடுத்துள்ளார்.பாளை., 13வது வார்டில் அமைந்துள்ள காந்தி மார்க்கெட்டில் ஆக்ரமிப்பு அதிகரித்துள்ளது. பொதுமக்கள் மார்க்கெட்டிற்குள் செல்ல வழியில்லாமல் அவதிப்படுகின்றனர். உரிமதாரர்களுக்கு ஒதுக்கப்பட்ட கடையின் அளவுக்கு கூடுதலாக ஆக்ரமிப்பு செய்து ஷட்டர் அமைத்துள்ளனர். தீப்பற்றக்கூடிய அடுப்பு வைத்து வியாபாரம் செய்கின்றனர். பல கடைக்காரர்கள் மாநகராட்சி அனுமதியில்லாமல் கடைகளை இடித்து மாற்றம் செய்துள்ளனர்.பொதுமக்கள் செல்லும் வழியில் வியாபாரம் நடப்பதால் துப்புரவு பணி மேற்கொள்ள முடியவில்லை. மேற்கு வாசலில் மாநகராட்சி கட்டண கழிப்பிடம் அருகில் மழைநீர் செல்ல வழியின்றி வடிகாலை அடைத்து தளத்தை உயர்த்தி ஆக்ரமிப்பு செய்துள்ளனர். இதனால் மழைக்காலங்களில் மழைநீர் தேங்குகிறது.மனகாவலம்பிள்ளை ஆஸ்பத்திரி தெருவை பார்த்த தெற்கு பகுதியில் உரிமதாரர்கள் மாநகராட்சி அனுமதியின்றி வாசல் அமைத்து வியாபாரம் செய்கின்றனர். போக்குவரத்து நிறைந்த இந்த பகுதியில் இதனால் அடிக்கடி போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது.பொதுமக்கள் நலன் கருதி மாநகராட்சி அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து ஆக்ரமிப்புகளை அகற்றவேண்டும்.இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

### மக்காச்சோளத்திற்கு கூடுதல் விலை: ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் டெண்டர் இன்று முதல் நடக்கிறது

உடுமலை : மக்காச்சோளத்திற்கு கூடுதல் விலை கிடைக்க உடுமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் வாரத்திற்கு மூன்று �ட்கள் டெண்டர் முறையில் மக்காச்சோளம் விற்பனை செய்யப்படுகிறது. முதல் டெண்டர் இன்று  நடக்கிறது. உடுமலை பகுதியில் ஆண்டு தோறும் 60 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆக.,ல் துவங்கும் ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட மக்காச்சோளம் அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளது. ஒரு மாதமாக அறுவடையான மக்காச்சோளம் ஒரு மூட்டைக்கு 950 முதல் 100 ரூபாய் வரை விலை கிடைத்து வந்தது. உடுமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், விவசாயிகள் அறுவடை செய்யும் மக்காச்சோளம் காயவைக்க, பெரிய அளவிலான உலர் களங்கள் இருப்பதால், வரத்து அதிகமாக காணப்பட்டது. தினமும் 500 முதல் 800 மூட்டை மக்காச்சோளம் வரத்து உள்ளது.

உடுமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு விவசாயிகளால் கொண்டு வரப்படும் மக்காச்சோளம், காயவைக்கப்பட்டு விற்பதற்கு தயாரானவுடன், நேரடியாக விவசாயிகளிடமிருந்து வியாபாரிகள் கொள் முதல் செய்து வருகின்றனர். மக்காச்சோளம் வரத்து அதிகரித்துள்ள நிலையில், குறிப்பிட்ட வியாபாரிகள் மட்டுமே கொள்முதல் செய்ய வருவதால், மக்காச்சோளம் விலை குறைந்து வருகிறது. உடுமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நேற்று ஒரு மூட்டை மக்காச்சோளம் 850 முதல் 870 ரூபாய் வரை மட்டுமே விற்றது. மக்காச்சோளம் சாகுபடிக்கு செலவு அதிகரித்த நிலையில், விலை இறங்கு முகமாக உள்ளதால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதனையடுத்து, வியாபாரிகளின் போட்டியை அதிகரித்து,  விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கும் வகையில், உடுமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில்  "டெண்டர்' முறை அமல் படுத்தப்பட உள்ளது. வாரம் முழுவதும் ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு வரும் மக்காச்சோளம் இருப்பு வைக்கப்பட்டு, திங்கள், புதன், வெள்ளி ஆகிய மூன்று நாட்கள் டெண்டர் முறையில் ஏலம் விடப்படுகிறது.

ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான மூட்டைகள் டெண்டர் முறையில் விற்பனை செய்யப் படுவதால், பெரிய அளவில் கொள்முதல் செய்யும் வியாபாரிகள் வருகை அதிகரிப்பதோடு, ரகசிய டெண்டர் காரணமாக வியாபாரிகளின் "சிண்டிகேட்'  இல்லாமல், மக்காச் சோளத் திற்கு கூடுதல் விலை விவசாயிகளுக்கு

கிடைக்கும் வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். ஒழுங்கு முறை விற்பனை கூட கண்காணிப்பாளர் நஞ்சப்பன் கூறியதாவது : உடுமலை பகுதிகளில் மக்காச்சோளம் அறுவடை தீவிரமடைந்துள்ளதால், விற்பனை கூடத்திற்கு மக்காச்சோளம் வரத்து அதிகரித்துள்ளது. வரத்து அதிகரிப்பு காரணமாக, விலை குறைந்து விவசாயிகள் பாதிக்கப் படுகின்றனர். கடந்த ஆண்டை போலவே இந்த ஆண்டும் "டெண்டர்' முறையில் மக்காச்சோளம் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. வாரத்தில், திங்கள், புதன், வெள்ளி கிழமைகளில் டெண்டர் நடத்தப்படும். முதல் டெண்டர், இன்று (ஜன., 20) நடக்கிறது. இம்முறையால், பெரிய அளவில் கொள்முதல் செய்யும் விவசாயிகள் வருகை அதிகரிப்பதோடு, விலையும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. மேலும், விலை குறைந்தால் விவசாயிகள் இருப்பு வைத்து பயன்பெறும் வகையில், 30 ஆயிரம் மூட்டைகள் இருப்பு வைக்கும் வசதியோடு, 10 குடோன்கள் தயார் நிலையில் உள்ளது. விவசாயிகளுக்கு பொருளாதார கடன் வசதியும் செய்யப்படுகிறது. எனவே, விவசாயிகள் இந்த வசதிகளை பயன்படுத்தி பலன் பெறலாம்.' என்றார்.

**தக்காளி விலை வீழ்ச்சி; பீட்ரூட் உயர்வு**

திருப்பூர் : திருப்பூர் காய்கறி மார்க்கெட் டுக்கு தக்காளி வரத்து அதிகரித்த தால், விலை வீழ்ச்சி ஏற்பட்டுள் ளது; ஒரு கிலோ தக்காளி ஐந்து ரூபாய்க்கு விற்கப்பட்டது.திருப்பூர் மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து அதிகரித்துள்ள தால், விலையில் கடும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.  ஒரு கிலோ தக்காளி 4 முதல் 5 வரை விற்கப்படுகிறது. திருப்பூர் சுற்று வட்டாரப்பகுதிகளில் தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளதே விலை வீழ்ச்சிக்கு காரணம். பீட்ரூட் வரவு குறைந்து, விலை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ பீட்ரூட் 20 ரூபாய்க்கு விற்கிறது.ஒரு கிலோ உருளை 20; கோஸ் 10; அவரை 20; பாலக் காடு சேனை 20; லோக்கல் சேனை 15; வெங்காயம் றியது 16; பெரியது 20; பாகை 16; புடலை 20; பீர்க்கங்காய் 20; பீன்ஸ் 20; கேரட் 20; முள்ளங்கி 10; பூசணி 8; அரசாணி 4; மேரக்காய் 10; கத்தரி 20; இஞ்சி 40; காளிபிளவர் 10 ரூபாய் என விற்கப்படுகிறது.முட்டை விலை ஐந்து காசு அதிகம்: முட்டை விலை ஐந்து காசு உயர்ந்துள்ளது. கொள் முதல் விலையில் 2.60 ரூபாய்; மொத்த விற்பனையில் 2.63; சில்லரை விற்பனையில் 2.75 முதல் 3.00 ரூபாய் வரை விற்பனையாகிறது.பருப்பு விலை இறங்குமுகம்: பருப்பு உற்பத்தி அதிகரித்து, அறுவடை முடிந்து புதிய பருப்பு கள் விற்பனைக்கு வரத் தொடங்கியுள்ளன. துவரம் பருப்பு உள்ளிட்ட பருப்புகள் விலை குறைந்துள்ளது.பருப்புகளின் விலை விபரம் குறித்து தினசரி மார்க்கெட் சங்கத் தலைவர் பாலசுப்ரமணி கூறிய தாவது:

தை மாத அறுவடை துவங்கி யுள்ளது. பருப்புகளின் வரவு அதிகரித்துள்ளதால், விலை விகிதம் குறைய ஆரம்பித்துள் ளது. ஒரு கிலோ துவரம் பருப்பு 74 ரூபாய்; தட்டப்பயிறு 44; கொள்ளு 28; வெள்ளை உளுந்து 82; கருப்பு உளுந்து 74; சுண்டல் கடலை 36; பாசிப்பருப்பு 74; பச்சப்பயிறு 65 ரூபாய் என விற்கப்படுகிறது.

புதுபருப்புகளின் வரவு உள்ளதால், தொடர்ந்து பருப்பு களின் விலை குறைய வாய்ப் புள்ளது. சர்க்கரை விலை மூட் டைக்கு 100 ரூபாய் அதிகரித்துள் ளது. ஒரு கிலோ சர்க்கரை 44 முதல் 45 ரூபாய் வரை விற் பனை செய்யப்படுகிறது. பொங் கல் பண்டிகை முடிந்து சீசன் குறைந்துள்ளதால், ஏலக்காய் விலை குறைந்துள்ளது. கிலோ வுக்கு 100 ரூபாய் குறைந்து, ஒரு கிலோ 1,200; உருண்டை வெல் லம் ஐந்து ரூபாய் குறைந்து 33 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பூ கிராக்கி முடிந்தது: பூ மார்க் கெட் சங்க செயலாளர் சக்தி வேல் கூறுகையில், ""பண்டிகை காலம் முடிந்ததால், உச்சத்தில் இருந்த பூக்களின் விலை குறைந் துள்ளது. மல்லிகை கிலோ 200 ரூபாய்; முல்லை 240; ஜாதி முல்லை 240; கனகாம்பரம் 200; பட்டுப்பூ 50; செவந்தி 50; பெங்களூரு மல்லி 100; அரளி 80 ரூபாய் என விற்பனையா கிறது. தாமரை பூ ஒன்று 5; ரோஸ் மற்றும் செண்பகப்பூ ஒரு ரூபாய் என விற்கிறது. வரும் நாட்களில் முகூர்த்த காலம் வந்தால், விலை ஏற வாய்ப்புள்ளது,'' என்றார்.

ஆயில் விலையில் மாற்றமில்லை: திருப்பூர் சமையல் ஆயில் வியாபாரிகள் சங்க தலைவர் சந்திரன் கூறுகையில், ""பொங்கல் பண்டிகைக்கு எதிர்பார்த்த ஆயில் விற்பனையில்லை. ஆயில் விலையில் மாற்றங்கள் ஏற்படவில்லை. நல்லெண்ணெய் கிலோ 95; விளக்கெண் ணெய் 80; சூரியகாந்தி எண்ணெய் 61; கடலை எண்ணெய் 78; தேங்காய்

எண்ணெய் 60; பாமாயில் கிலோ 46; நெய் கிலோ 280 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. சமையல் எண்ணெய்களின் விலையில் அதிகளவில் மாற்றம் ஏற்படும் வாய்ப்பு இல்லை," என்றார்.

சூடுபிடிக்கிறது தங்கம் விற்பனை: தை மாதத்தில், அதிகமான முகூர்த்த நாட்கள் வருவதால், தங்கத்தின் விற்பனையில் சூடுபிடிக்க துவங்கியுள்ளது. நகை வியாபாரிகள் சங்க துணை தலைவர் பரசுராமன் கூறுகையில், ""தை மாதம் முதல் ஆவணி வரை முகூர்த்த நாட்கள் அதிகம் உள்ளன. தங்கம் வாங்குவோர் எண்ணிக்கை அதிகரிக்க துவங்கியுள்ளது. முகூர்த்த விற்பனை சூடுபிடிக்க துவங்கியுள்ளது. இன்று (நேற்று) ஒரு கிராம் 1,595 ரூபாய், பவுன் 12,760 ரூபாய் என விற்கப்படுகிறது. வெள்ளி ஒரு கிராம் 30.50 ரூபாய்க்கு விற்கிறது," என்றார்.

### கொத்தமல்லியில் மர்மநோய்

உடுமலை : தளி மற்றும் சுற்றுப்பகுதி களில் சாகுபடி செய்யப்பட் டுள்ள கொத்தமல்லி மர்ம நோய் தாக்குதலால், மக சூல் பாதிக்கப்பட்டுள்ளதாக, விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.தளி, வாளவாடி, மொடக்குப்பட்டி, அந்தியூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில், 2,000 ஏக்கர் பரப்பளவில் மானாவாரி பயிரான கொத்தமல்லி சாகுபடி செய்யப்பட்டது. 90 நாள் பயிரான கொத்த மல்லியில் நல்ல பருவ நிலை மற்றும் பயிரின் வளர்ச்சி பருவத்தில் மழை கிடைத்ததால், வழக்கமாக கிடைக்கும் 10 மூட்டை மகசூலை விட, கடந் தாண்டு 50 சதவீதம் வரை மகசூல் அதிகரித்தது.ஆனால், போதிய விலை கிடைக்காததால்,கொத்த மல்லி விற்பனை செய்ய முடியாமல் இருப்பு வைத் துள்ளனர். இந்நிலையில், இந்தாண்டு சாகுபடி செய்த கொத்தமல்லி, மழை மற் றும் மர்ம நோய் தாக்கு தலால், பாதிக்கப்பட்டு மகசூல் குறைந்துள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.விவசாயிகள் கூறிய தாவது:

மானாவாரி பயிரான கொத்தமல்லி சாகுபடிக்கு, ஏக்கருக்கு ரூ.6 ஆயிரம் வரை சாகுபடி செலவா கிறது. கடந்தாண்டு கொத்த மல்லி பயிரிட்ட நேரத்தில், பருவ மழை போதிய அளவு கை கொடுத்ததால், மகசூல் அதிகளவு கிடைத்தது.ஆனால், விலை கிடைக் காததால், விற்க முடியாமல் உள்ளது. இந்நிலையில், இந்தாண்டு சாகுபடி செய்த கொத்தமல்லி பயிர்கள் நவ., மாதம் பெய்த மழை யால் பாதிக்கப்பட்டது.தற்போது, மர்ம நோய் தாக்குதலால், கொத்தமல்லி செடிகள் கருகியுள்ளன. இத னால், ஏக்கருக்கு மூன்று மூட்டை கிடைக்குமா என் பதே கேள்விக்குறியாகி யுள்ளது. போதிய மகசூல் கிடைக்காவிட்டால், நஷ் டம் ஏற்படும் நிலை உள்ளது, என்றனர்.

### நவீன தொழில்நுட்பம் ஜனவரி 19,2010,16:35 IST

கொம்பு சிலிக்கா உரம்: குவார்ட்ஸ் எனப்படும் வெண்ணிற படிக கல்லிலிருந்து பெறப்படுகிறது. குவார்ட்ஸ் படிகக்கல்லை இரும்பு உரலிலிட்டு நன்றாகப் பொடிசெய்ய வேண்டும். முகப்பூச்சு பவுடர்போல்மிகவும் சன்னமாக இருக்க வேண்டும். இந்த குவார்ட்ஸ் பவுடரை சிறிது தண்ணீர் தெளித்து ஈரப்படுத்திக்கொண்டு பசுமாட்டுக் கொம்பில் நிறைத்து அடைக்க வேண்டும். பின்னர் இக்கொம்புகளை கொம்பு சாண உரம் தயாரிக்க எடுக்கப்பட்ட குழியிலோ அல்லது அதேபோல தனியாக எடுக்கப்பட்ட இன்னொரு குழியிலோ ஒன்றரை அடி ஆழத்தில் கொம்பின் நுனிப்பகுதி மேல்நோக்கி இருக்குமாறு அடுக்க வேண்டும்.

இக்கொம்புகளை சித்திரை - வைகாசி (ஏப்ரல் - மே) மாதங்களில் மேல்நோக்குநாளன்று புதைக்க வேண்டும். கொம்புகளை அடுக்கியபிறகு மேல்மண் கொண்டோ அல்லது மேல்மண் மற்றும் கம்போஸ்ட் உரம் 3:1 என்ற விகிதத்தில் கலந்த கலவையைக்கொண்டோ மூடிவிட வேண்டும். பின் நீர் தெளித்து மிதமான அளவு ஈரம் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். கொம்புகளை புதைத்த இடத்திற்கருகில் குச்சிகளை ஊன்றி அடையாளப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். புதைத்த 6 மாதங்கள் கழித்து புரட்டாசி - ஐப்பசி மாதம் (செப்டம்பர் - அக்டோபர்) மாதங்களில் மண்ணைத் தோண்டி கொம்புகளை கவனமாக வெளியே எடுக்க வேண்டும். பின் கொம்புகளிலிருந்து கொம்பு சிலிக்காத்தூளை தட்டி வெளியில் எடுத்து சூரிய ஒளியில் நன்கு காயவைக்க

வேண்டும். பின்னர் இப்பவுடரை நிறமற்ற கண்ணாடி பாட்டிலில் வைத்து பாதுகாக்க வேண்டும். இப்புட்டிகளை இருட்டான இடங்களில் வைக்கக்கூடாது.

பயன்படுத்தும் முறை: மழை நீரை 16 லிட்டர் அளவில் பிளாஸ்டிக் வாளியில் எடுத்துக்கொண்டு அதில் ஒரு கிராம் கொம்புசிலிக்கா உரத்தை கலக்க வேண்டும். ஒரு குச்சியின் இடதுபுறமாக நன்கு குழியான சுழல் வரும்வரை வேகமாக சுற்ற வேண்டும். பின்னர் திசையை மாற்றி வலதுபுறமாக இதேபோல் நன்கு சுழல் வரும்வரை சுற்ற வேண்டும். இவ்வாறு மாற்றி மாற்றி ஒரு மணி நேரம் இடைவிடாமல் நன்கு கலக்க வேண்டும். இக்கலவையை பயிர்களின் மேல் பாகத்தில் பனிமூட்டம் போல் காலை வேளையில் (6-8 மணி) தெளிப்பான் மூலம் ஒரு ஏக்கரில் தெளிக்க வேண்டும்.

கொம்புசிலிக்கா உரம் செடிகளின் ஒளிச்சேர்க்கையைத் துரிதப்படுத்துகிறது. இதனால் விளைபொருட்களின் தன்மையும் தரமும் அதிகரிக்கின்றன. மேலும் இதனைத் தெளிப்பதால், பல பூஞ்சாண நோய் தாக்குதல் வருவதில்லை என கண்டறியப்பட்டுள்ளது. கொம்பு சிலிக்கா உரம் தெளிக்கப்பட்ட திராட்சை தோட்டத்தில் திராட்சையின் இனிப்பு அளவு ஒன்றரை மடங்கு அதிகரித்துள்ளது. தக்காளி பயிரில் இலைக்கருகல் நோய் வராமல் தவிர்க்கப்பட்டுள்ளது. குறுகிய காலப்பயிர்கள், பழப்பயிர்களில் இரண்டு, மூன்று முறைகள் தெளிக்க வேண்டும். (தகவல்: பா.வெங்கடேசன், உதவி இயக்குனர், ஸ்பைசஸ் போர்டு, ஜோர்த்தாஸ், சிக்கிம்.
email: venspicy@yahoo.co.in)

சின்னச்சின்ன செய்திகள் ஜனவரி 19,2010,16:34 IST





முருங்கை: முருங்கையை மட்டும் தனிப்பயிராக செய்வது அவ்வளவு சிறப்பாக இருக்காது. முருங்கைக்கு எல்லா காலத்திலும் நல்ல விலை கிடைப்பதில்லை என்பதால் அதை மட்டும் நம்பினால் நஷ்டம் வரும. எனவே இஞ்சி, மஞ்சள், மிளகாய் போன்வற்றை ஊடுபயிராக செய்யலாம். இத்தகைய பயிர்களுக்கு குறைந்த சூரிய ஒளி இருந்தால் போதும். செடிமுருங்கை தோட்டத்தில் அதிக நிழல் விழாது என்பதால் இந்த பயிர்களை தாராளமாக சாகுபடி செய்யலாம். மாதம் இரண்டுமுறை பாசன நீருடன் 200 லிட்டர் ஜீவாம்ருத கரைசலைக் கலந்துவிடலாம். முருங்கையில் அறுவடை முடிந்தவுடன் கட்டாயம் கவாத்து செய்ய வேண்டும். (பசுமைவிகடன், ஜனவரி 10, 2010)

கொத்து அவரை சாகுபடி: கே.கே.பட்டி (தேனி) விவசாயி முருகன் ஒரு ஏக்கரில் நிகர வருமானமாக ரூ.62,250/- கிடைக்கிறது என்று சொல்கிறார். விதைப்பு புரட்டாசி மாதம். ரகம் சூப்பர்சோனி. விதை 8 கிலோ/ஏக்கர். விலை ரூ.700/-. அடியுரம் பாக்டம்பாஸ் 2 மூடை பயிர் பாதுகாப்புக்கு ஹெர்போ இடுபொருட்கள் பயன்படுத்தியுள்ளார். அதாவது ஆரோ, கியூக் மற்றும் சோனா (டானிக்) சாகுபடி செலவு ரூ.22,500/-. மொத்த வருமானம் ரூ.98,750/-. விவசாயி முகவரி: முருகன், த/பெ. ஒச்சாதேவர், கே.கே.பட்டி, மந்தையம்மன் கோயில் தெரு, உத்தமபாளையம் வட்டம், தேனி மாவட்டம், 95971 40598.

வாழைக்குள் ஊடுபயிராக புடலை: நாகர்கோவிலில் இருந்து திருவனந்தபுரம் செல்லும் சாலையில் மார்த்தாண்டம் நகரிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது கொல்லங்கோடு.
விவசாயி ஜோஸ் 60 சென்ட் நிலத்தில் 600 வாழைத்தார் மற்றும் 12 டன் புடலை மகசூல் எடுத்து சாதனை படைத்துள்ளார். களிமண் உப்பு மண் நீங்கலாக மற்ற மண்ணில் வரும். விவசாயியின் நிலம் எப்போதுமே நீர்பிடிப்பு உள்ள மண் கொண்டது.


புடலைக்கு பட்டம் எல்லாம் கிடையாது. எந்த மாதத்தில் வேண்டுமானாலும் விதைக்கலாம். 12 அடி இடைவெளியில் 2 அடி உயரத்தில் பாத்திகளை அமைத்து, பாத்திகளின் நடுவில் அரையடி ஆழத்திற்கு மண்ணைத் தோண்டி மக்கிய தொழு உரம் மற்றும் மண்புழு உரத்தை அடி உரமாகப் போட்டு கிளறிவிட்டு மண்ணைப் பக்குவப்படுத்த வேண்டும். விதைகளை 8 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து பின் நடவுசெய்ய வேண்டும். பாத்திகளின் நடுவில் 7 அடிக்கு 7 அடி இடைவெளியில் அரையடி ஆழத்தில் குழியெடுத்து ஒவ்வொரு குழியிலும் 5 விதைகளை ஒரு அங்குல ஆழத்தில் நடவேண்டும். 60 சென்ட் நிலத்தில் 300 குழிகள் வரும். ஒவ்வொரு குழிக்கும் இடையே உள்ள இடைவெளியில் வாழைக்கன்றுகளை நடவேண்டும்.

இப்போது பார்த்தால் புடலைக்கு புடலை, வாழைக்கு வாழை 7 அடி இடைவெளி இருக்கும். 45வது நாளில் சவுக்கு மரங்களை ஊன்றி கயிறு கட்டி பந்தல் அமைக்க வேண்டும். கொடிபந்தலிட்டு படரும் வரை வாரம் ஒருமுறை,

குழிக்கு 30 கிராம் பாஸ்பேட் உரம் இடவேண்டும். தொடர்புக்கு: ஜோஸ்: 04651-246 600; பாலசுப்பிரமணியம் - 94864 08384.

-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

சமவெளியில் பீன்ஸ் சாகுபடி ஜனவரி 19,2010,16:33 IST



தற்போது குள்ளமாக படர்ந்து வளரக்கூடிய பீன்ஸ் வகைகளை சாகுபடி செய்யலாம். இது குறுகிய கால பயிர். அறுவடை 60 நாட்களில் கிடைக்கும். ஜூன் - ஜூலை மாதங்களில் மலைப் பிரதேங்களிலும், டிசம்பர் - ஜனவரியில் சமவெளியிலும் சாகுபடி செய்யலாம். விதை முளைப்பதற்கு மண்ணின் வெப்ப நிலை 15 டிகிரி செல்சியசுக்கு அதிகமாக இருப்பது முக்கியம். குறைவாக இருப்பின் விதை முளைக்காமல் அழுகி அழிந்து விடும். எல்லா வகை மண்ணிலும் பீன்ஸ் சாகுபடி செய்ய முடியுமானாலும் சாகுபடி செய்யும் மண்ணில் வடிகால் வசதி சிறப்பாக இருப்பது மிகவும் முக்கியமானது. இதோடு மண்ணில் அங்ககச் சத்து சிறப்பாக இருப்பது மிகவும் முக்கியமானது. இதோடு மண்ணில் அங்ககச் சத்து அதிகமாக இருக்க வேண்டும். மணல் கலந்த வண்டல் மண் வகை மற்றும் செம்மண் நிலமும் சாகுபடிக்கு ஏற்று வரும். பீன்ஸ் சாகுபடிக்கு ஐந்து அல்லது ஆறு நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்யப்பட வேண்டும். தற்போது மார்க்கெட்டில் கிடைக்கும் பீன்ஸ் ரகங்களான அபூர்வா, அனுபமா போன்றவைகளை சாகுபடி செய்யலாம். (வயது 65 நாட்கள்) இவைகளில் நார் கிடையாது.
பீன்ஸ் சாகுபடியில் நிலம் தயாரிப்பதற்கு போதிய கவனம் செலுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு பத்து டன்கள் மக்கிய தொழு உரம் இட்டு நிலத்தை உழுது பார்சால் அமைக்க வேண்டும். பார்சால் அமைப்பதற்கு முன்பாகவே ஏக்கருக்கு 27.5 கிலோ யூரியா, 250 கிலோ சூப்பர் பாஸ்பேட், 50 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் இட்டு நிலத்தை உழுது விட வேண்டும். வயலில் பாருக்கு பார் இடைவெளி 45 செ.மீ., இருத்தல் அவசியமாகும். பாரின் பாதி உயரத்தில் விதையை 15 செ.மீ. ஆழத்தில் விதைக்க வேண்டும். விதைப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் பாசனம் செய்திருந்தால் மண்ணின் வெப்பநிலை விதை பழுதில்லாமல் முளைப்பதற்கு ஏற்றதாக இருக்கும். தேர்ந்தெடுத்த விதையினை கேப்டான் மருந்து ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் அளவு கலந்து பூமியில் விதைக்க வேண்டும். ஒரு ஏக்கர் விதைப்பதற்கு 20 கிலோ விதை தேவைப்படும். நிலத்தில் இது சமயம் நீர் தேங்கி நிற்கக் கூடாது. ஆரம்பக்கட்டத்தில் அதாவது பூமியில் விதை முளைத்து 30 நாட்கள் ஆகும் வரையில் எந்த வித களையும் தலை காட்டாதபடி செய்ய வேண்டும். விதைத்த 30ம் நாள் செடிகளுக்கு மண் அணைக்க வேண்டும். இப்பணியை செய்யும் முன் மேலுரமாக 27.5 கிலோ யூரியா இட வேண்டும். பீன்ஸ் சாகுபடியில் பயிர் பாதுகாப்பினை நன்கு கவனித்து

செய்யவேண்டும். பொதுவாக விதை முளைத்து ஐந்து வாரங்களுக்குப் பின் பயிர் பாதுகாப்பு மருந்துகளை தெளிக்கக்கூடாது. அசுவிணியைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு 1.5 மில்லி வீதம் ரோகார் மருந்து கலந்து செடிகள் மேல் தெளிக்க வேண்டும். காய்த்துளைப்பான் பூச்சியை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மில்லி வீதம் எண்டோசல்பான் கலந்து தெளிக்க வேண்டும். ரூட் கிரப் பூச்சியை கட்டுப்படுத்த 20 லிட்டர் நீரில் 40 கிராம் கராத்தேன், 20 மில்லி நூவக்ரான் கலந்து தெளிக்கலாம். மைட்ஸ் பூச்சியினை அழிக்க 40 மில்லி கெல்தேன்மருந்தை 20 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம். இலைப்புள்ளி நோயினைத் தடுக்க ஒரு லிட்டர் நீரில் ஒரு கிராம் பவிஸ்டின் அல்லது மூன்று கிராம் டைத்தேன் எம்.45 மருந்து கலந்து தெளிக்கலாம். காப்பர் ஆக்சி குளோரைடு (60 கிராம் மருந்தை 18 லிட்டர் நீரில் கலந்து) மருந்தினை தெளித்து இலை மேல் படரும் வெண்மையான பூசணத்தை அழிக்கலாம். துரு நோயினை அழிக்க நனையும் கந்தகம் ஒரு லிட்டர் நீருக்கு 2.5 கிராம் அளவு கலந்து தெளிக்கலாம். பீன்ஸ் குறுகிய காலப் பயிர். இதில் அறுவடை விதை நட்ட 45ம் நாளிலிருந்து துவங்கும். அறுவடையை திறம்பட செய்து இளசான காய்களை எடுக்க வேண்டும். இப்பணியை கவனமில்லாமல் செய்தால் பீன்ஸ் காய்கள் முதிர்ச்சி அடைந்து விடும். மார்க்கெட்டில் இதனை விற்க இயலாது. ஒரு ஏக்கரில் ஒரு நாள் அல்லது இரண்டு நாள் இடைவெளியில் மொத்தம் 8, 9 அறுவடைகள் கிடைக்கும். திறம்பட சாகுபடி செய்தால் ஏக்கரில் 4,000 கிலோ வரை மகசூல் எடுக்கின்றனர்.

சாகுபடி செலவு ( ஒரு ஏக்கர்) = ரூ.14,350

சாகுபடியில் நிகர லாபம் = ரூ.5,650 அல்லது ரூ.6 ஆயிரம்

முக்கிய கவனிப்பு : பீன்ஸ் காய்கள் வியாபாரத்தை கவனமாக செய்ய வேண்டும். காய்களை வெப்பமான சூழ்நிலையில் சேமித்து வைக்கக் கூடாது. காய்களை காற்றோட்டமுள்ள சாக்கு பைகளில் பேக் செய்து வியாபாரத்திற்கு எடுத்து செல்ல வேண்டும். காய்களை அப்படியே திணித்து மூடை பூராவும் நிரப்பி விடக்கூடாது. மூடையினுள்ளும் காற்றோட்டம் இருக்க வேண்டும். அதாவது முக்கால் மூடை உள்ளபடி நிரப்ப வேண்டும். மூடை ஈரமாக இருந்தால் காய்கள் இளசாக தளதளவென்று இருக்கும். மூடை நீர் சொட்ட, சொட்ட ஈரமான நிலையில் இல்லாமல் இருப்பது முக்கியம்.

-எஸ்.எஸ்.நாகராஜன்

தினகரன்

**விலை உயர்வால் வாங்க ஆளில்லை**

பதிவு செய்த நாள் 1/20/2010 12:32:21 AM



சின்னமனூர் : இந்திய ஏலக்காயின் விலை சர்வதேச சந்தையில் ஏற்ற இறக்கத்துடன் காணப்படுகிறது. விலை உயர்ந்ததால் வியாபாரிகள் வாங்க தயக்கம் காட்டி வருகின்றனர்.

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் விளையும் ஏலக்காய் அமெரிக்கா, ரஷ்யா, கனடா, ஜப்பான், சவூதி அரேபியா உள்பட பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு சீசனில் இந்தியாவில் 12 ஆயிரம் டன் ஏலக்காய் விளைச்சல் ஏற்பட்டது. இதில் 700 டன் ஏலக்காய் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. நடப்பு சீசன் ஜூன் மாதம் துவங்கியது. இந்த சீசனில் 8 ஆயிரம் டன் ஏலக்காய் விளைச்சல் கிடைத்துள்ளது. இதில் ஆயிரம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 1ம் தேதியன்று வண்டன்மேட்டில் நடந்த ஏலத்தில் 8 பருவட்டு உயர் ரக ஏலக்காய் கிலோ ஆயிரத்து 507 ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த 2002ம் ஆண்டு 8 பருவட்டு ஏலக்காய் கிலோ ரூ.ஆயிரத்து 225க்கு விலைபோனதுதான் இதுவரை அதிகபட்ச விலையாக இருந்தது.
ஏலக்காயின் வரலாறு காணாத விலை உயர்வு வியாபாரிகளை அச்சத்தில் ஆழ்த்தியது. நிறுவனங்கள் வாங்குவதற்கு தயக்கம் காட்டி வருகின்றன. விலையேற்றம் சர்வதேச சந்தையிலும் எதிரொலித்தது. அதனால் ஏற்றுமதியாளர்களும் ஏலக்காய் வாங்கி ஸ்டாக் வைப்பதில் ஆர்வம் காட்டவில்லை. இதனால் 8 பருவட்டு ஏலக்காய் விலை கிலோ ஆயிரத்து 280 ஆக சரிந்தது.

7 பருவட்டு ஏலக்காய் கிலோ ஆயிரத்து 100 ஆக உள்ளது. விலையில் ஏற்ற இறக்கத்தால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

### மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய்க்கு கடும் எதிர்ப்பு

பதிவு செய்த நாள் 1/20/2010 12:33:45 AM



சென்னை : பிடி கத்திரிக்காய்க்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், வரும் 30ம் தேதி சென்னையில் பேரணி நடத்தப்படும் என்று பாதுகாப்பான உணவுக்கான கூட்டமைப்பு (எஸ்எப்ஏ) தெரிவித்துள்ளது.
இந்த கூட்டமைப்பு சார்பில், கத்திரீகா... என்ற குறும்படம் வெளியீட்டு நிகழ்ச்சி, ராயப்பேட்டையில் உள்ள இமேஜ் ஸ்டுடியோவில் நேற்று நடந்தது.

இதில், மக்கள் சிவில் உரிமைக் கழக மாநில தலைவர் சுரேஷ், சென்னை இயற்கையாளர் சங்கச் செயலாளர் சுதாகர், பெண்கள் இணைப்புக்குழு பிரதிநிதி ஷீலு பிரான்சிஸ், திரைப்பட இயக்குனர் வசந்த், நடிகை ரோகிணி, சித்ரா விஸ்வேஸ்வரன், வணிகர் சங்க இணைச் செயலாளர் தேவராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பின்னர், மக்கள் சிவில் உரிமைக் கழக தலைவர் சுரேஷ், நிருபர்களிடம் கூறியதாவது:
மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பயிர்களை இந்தியாவில் பயிர் செய்வதை தடுத்து நிறுத்துவதுதான், பாதுகாப்பான உணவுக்கான கூட்டமைப்பின் நோக்கம்.

இந்தியாவில் பிடி பருத்தி அறிமுகமானதில் இருந்து அதை மேய்ந்த ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்துள்ளன. பரவலாக பயிர்ச்சேதம் அடைந்துள்ளது. 1.5 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்துக் கொண்டனர். இதைத்தொடர்ந்து, இப்போது பிடி கத்திரிக்காய் அறிமுகம் செய்யப்பட உள்ளது.
இதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் சட்டீஸ்கர், கேரளா, ஒரிசா, மத்தியபிரதேசம், மேற்கு வங்கம், ஆந்திரா, உத்தராஞ்சல் போன்ற மாநிலங்கள் பிடி கத்திரிக்காய்க்கு தடை விதித்தன. இந்த விஷயத்தில் தமிழக அரசு மவுனமாக உள்ளது.

இந்நிலையில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பிடி கத்திரிக்காயின் பயங்கரத்தை பற்றி, மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த இந்த குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில், பிரபலமானவர்கள் தங்கள் கருத்தை தெரிவித்துள்ளனர். இந்த குறும்படம் தமிழகம் முழுவதும் திரையிடப்பட உள்ளது.
வரும் 30ம் தேதி, மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்படும். சென்னையில் விவசாயிகள், நுகர்வோர், வணிகர்கள், பலவகை நாட்டு கத்தரிக்காய் ரகங்களை தள்ளு வண்டிகள் மற்றும் கூடைகளில், நகரத்தின் பல்வேறு இடங்களில் இருந்து ஊர்வலமாக எடுத்து வந்து மெரினா கடற்கரையில் ஒன்று கூடுவார்கள். இவ்வாறு சுரேஷ் தெரிவித்தார்.

**வேளாண் வணிக மையத்தை பயன்படுத்த வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் 1/20/2010 1:54:18 AM

சிவகங்கை : நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டம் கோட்டக்கரையாறு உபவடிநில பகுதியான காளையார்கோவில் அருகே புரசடைஉடைப்பு கிராமத்தில் வேளாண் வணிக மையம் கட்டப்பட்டுள்ளது. இந்த வணிக மையத்தில் உலர்களம், சேமிப்பு கிடங்கு போன்ற உட் கட்டமைப்புகளும், ஈர மானி, மின் எடைதராசு போன்ற உபகரணங்களும் உள்ளன. மேலும் இந்த வேளாண் வணிக மையத்தின் மூலம் விவசாயிகளை ஒன்றினைத்து வேளாண் விளைபொருள் குழு அமைத்தல், விளை பொருள் குழுக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் முறையில் கொள்முதல் நிறுவனத்தில் விளைபொருட்களை விற் பனை செய்ய ஏற்பாடு செய் தல், குழுக்களில் உள்ள விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி அளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. எனவே விவசாயிகள் விளை பொருட்களை உலரவைத்து வேளாண் வணிக மையத்தில் உள்ள சேமிப்பு கிடங்கில் சேமித்து வைக் கலாம். சிறிய சேவை கட்டணம் மட்டும் செலுத்தி ஈர மானி, மின் எடை தராசுகளையும் விவசாயிகள் பயன்படுத்தி கொள் ளலாம். வேளாண் வணிகம் வேளாண்மை துணை இயக்குநர் ஜீவா கூறு கையில்: வேளாண் வணிக மையத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் முறையில் இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக தங்களது விளைப்பொருட் களை விவசாயிகள் விற்பனை செய்ய லாம். இதன் மூலம் அதிக அளவில் லாபம் கிடைக்கிறது. இப்பகுதிகளில் பிப். மார்ச் ஆகிய மாதங்களில் அறுவடை செய்யப்படும் நிலக்கடலையை இந்த வணிக மையத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்றார்.

**விவசாய கருவிகள் சேவை மையம்**

பதிவு செய்த நாள் 1/19/2010 7:37:14 AM

சேலம்: காடையாம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் வேளாண் இயந்திர சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறைந்த வாடகையில் விவசாய கருவிகள் கிடைக்கும்.

தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் அறிவிப்பின்பேரில், தமிழகத்திலேயே முதல் முறையாக சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் காடையாம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் வேளாண் இயந்திர சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளது. இதனை மாவட்ட ஆட்சியர் சந்திரகுமார் தொடங்கி வைத்து பேசியதாவது: வேளாண்மையில் பயன்படுத்தக்கூடிய ட்வைன்ஸ் கல்டிவேட்டர், டிஸ்க் கலப்பை, ரோட்டவேட்டர், பவர் வீடர், மல்டி கிராப் த்ரேசர், டிராக்டர் போன்ற கருவிகளை வாங்க பயன்படுத்த இயலாத சிறு குறு விவசாயிகள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தில் ரூ.13 லட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரக் கருவிகள் இம்மையத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதனை கூட்டுறவு மனப்பான்மையோடு பயன்படுத்தி உயர வேண்டுமென விவசாயிகளை ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் மண்டல இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் ராமதாஸ், பொது மேலாளர் ராமசாமி, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கருணாநிதி, ஓமலூர் சரக துணைப்பதிவாளர் மனோகரன், உதவி வேளாண் இயக்குநர் சுந்தர், உதவி வேளாண் பொறியாளர் செந்தில்நாதன், நபார்டு உதவி பொது மேலாளர் மணிமேகலை மற்றும் முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் 15 மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு தலா ரூ.60 ஆயிரம் சுழல்நிதி கடன் வழங்கப்பட்டது. சங்க தனி அலுவலர் ரவிச்சந்திரன் வரவேற்றார். செயலாளர் கருணாநிதி நன்றி கூறினார்.